


# சிவதொண்டன்

**எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்**

சுபகிருது வருடம் மார்கழி- தை (2023 ஜனவரி- பெப்ரவரி)

மலர் - 87 இதழ் - 1-2





திருச்சிற்றம்பலம்

மற்றொரு துணைஇனி மறுமைக்குங் காணேன்
வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்
துணையென்று நான்தொழப் பட்டஒண் சுடரை
முத்தியும் ஞானமும் வானவ ரறியா
முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே

திருச்சிற்றம்பலம்

- சுந்தரமூர்த்தி சுவாமிகள்

**பொழிப்புரை :**

சூழ்ந்துள்ள சுற்றத்தாரையும் துணையென்று நினையாது, 'இவனே துணை' என்று தெளிந்து, நாள்தோறும் என்னால் வணங்கப்படுகின்ற, ஒளியையுடைய விளக்குப் போல்பவனும், வீடாவதும், ஞானமாவதும், அவற்றை அடைவிப்பனவாய் அமைந்த, தேவராலும் அறியப்படாத அளவற்ற நெறிகளாவனவும் இவை என்பதனைப் படிமுறையானே அறிவித்து, மெய்ப்பொருளை எனக்கு உணர்த்தியருளிய கடவுளும் ஆகிய பெருமானை, அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, 'திருக்கழுமலம்' என்னும் இவ்வளநகரிற் கண்டு கொண்டேன். அதனால் , முன்பு அவனை மறந்து வருந்திய யான், இனி ஒருபோதும் அவனை மறவாதிருக்கும் திருவருளைப் பெற்றேன். ஆகவே, இம்மைக்கேயன்றி மறுமைக்கும் இனி மற்றொரு துணையை நாடேன்.

யாழ். மாநகர ச... 03 APR 20...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| யாகம் | 01.01.2023 | ஞாயிறு | காலை 8.00 மணிமுதல் | சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம் |
| | 05.02.2023 | ஞாயிறு | | |
| | 05.03.2023 | ஞாயிறு | | |
| | 02.04.2023 | ஞாயிறு | | |
| | 07.05.2023 | ஞாயிறு | | |
| | 04.06.2023 | ஞாயிறு | | |
| | 02.07.2023 | ஞாயிறு | | |
| | 06.08.2023 | ஞாயிறு | | |
| | 03.09.2023 | ஞாயிறு | | |
| | 01.10.2023 | ஞாயிறு | | |
| | 05.11.2023 | ஞாயிறு | | |
| | 03.12.2023 | ஞாயிறு | | |
| ஆயிலியம் | 09.01.2023 | திங்கள் | நண்பகல் | யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம் |
| | 06.02.2023 | திங்கள் | | |
| | 05.03.2023 | ஞாயிறு | | |
| | 01.04.2023 | சனி | | |
| | 28.04.2023 | வெள்ளி | | |
| | 26.05.2023 | வெள்ளி | | |
| | 22.06.2023 | வியாழன் | பிற்பகல் | கொழும்புத்துறை |
| | 19.07.2023 | புதன் | | செங்கலடி சிவதொண்டன் நிலையம் |
| | 16.08.2023 | புதன் | | |
| | 12.09.2023 | செவ்வாய் | | |
| | 09.10.2023 | திங்கள் | | |
| | 06.11.2023 | திங்கள் | | |
| | 03.12.2023 | ஞாயிறு | | |
| | 30.12.2023 | சனி | | |

**18.02.2023 சனி - சிவராத்திரி**
**27.03.2023 திங்கள் - திருவடி பூசை**
**01.04.2023 சனி- குருபூசை**
**13.09.2023 புதன் -நல்லூர் கந்தசுவாமி தேர்த்திருவிழா**
**04.11.2023 சனி -ஆண்டு விழா**
**27.12.2023 புதன்- ஆருத்திரா அபிடேகம்**

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| ஆண்டவன் திருவடி | 01 |
| சிவதொண்டன் வாழ்த்துப்பா | 02 |
| கீதையில் மலர்ந்த எண்ணங்கள் (II) | 03 |
| நாகதீய சூக்தம் (தொடர்ச்சி) | 08 |
| ஒரு சின்னத்தங்க நற்சிந்தனை | 09 |
| சுட்டிறந்து நில் | 13 |
| தசகாரியம் | 15 |
| குருவடிவாவது திருவடியே (ஆசிரியர்) | 19 |
| நற்சிந்தனை | 21 |
| Natchinthanai | 23 |
| Yogaswami the Great Yogi | 24 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்


18 MAR 2023
யாழ்நகர சபை
யாழ்ப்பாணம்

யாழ். மாநகர சபை
03 APR 2023
தாபனப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் : 87 சுபகிருது வருடம் மார்கழி- தை (2023 ஜனவரி - பெப்ரவரி) இதழ் : 1 -2

## ஆண்டவன் திருவடி

இராகம் - தன்னியாசி தாளம் - ஆதி

பல்லவி

ஆண்டவன் திருவடி வேண்டிக்கொண் டாலென்றும்
ஆறுதல் உண்டாகும்

அநுபல்லவி

காண்பதெல் லாம்நிலை யன்றெனக் காட்டும்
காயத்தை வெல்லுமு பாயத்தை யூட்டும் (ஆண்டவன்)

சரணங்கள்

பஞ்சப் புலன்வழி போம்மனத் தினைவெல்லும்
பஞ்சாட் சரத்தை யனுதினஞ் சொல்லும்
கொஞ்சங்கொஞ் சமாகச் சினத்தினைக் கொல்லும்
குற்றம் யாவையுங் குணமாகக் கொள்ளும் (ஆண்டவன்)

பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை போக்கும்
போக்கு வரவற்ற பொன்னடி நோக்கும்
எந்நாளும் சும்மா விருப்பதைக் காக்கும்
ஏழைகள் பேரில் இரக்கத்தை யாக்கும் (ஆண்டவன்)

வெட்ட வெளியிலே நின்றிடர் தீர்க்கும்
வேதாந்த சித்தாந்தம் ஒன்றென்று நோக்கும்
கட்டுப் படாத மனத்தினைக் கட்டும்
கங்குல் பகலற்ற காட்சியுண் டாக்கும் (ஆண்டவன்)

சுவாமி யோகநாதன் சொல்லிய பாட்டு
சுந்தர மான வழிதனைக் காட்டும்
ஆவி யுள்ளளவும் அமுதத்தை யூட்டும்
அகம்பிர மாஸ்மி யெனமுடி சூட்டும் (ஆண்டவன்)

- நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன் வாழ்த்துப்பா

வாச மலரெடுத்து வண்ணத்துக் கோலமிட்டுப்
பேச இனிய பெரும்பெயர் - பாசத்தாற்
கூறி வருகின்ற குமரன் சிவதொண்டன்
பாரினில் வாழ வழுத்து.

சிவம் தனைப் பெருக்கும் சீர்சிவ தொண்டனை
அவத்தில் அழியாமல் ஆர நினைமின்
அவன்தரும் செய்திகள் அனைத்தும் அறிமின்
தவமும் இஃதே சலியாது செய்மின்
செய்தி என்பதைச் செய்வாய் என்றும்
ஐயம் இன்றி அறிய வருமோர்
மெய்மை உள்ள மேதைமை யான
தொய்விலா நிகழ்ச்சித் தொகுப்பெனத் தொகுத்துச்
சொல்லும் வார்த்தைகள் சொரியும் வழிகள்
எல்லாம் தருவன என்றுஅறிவம் யாமே.
தெரியாப் பொருளைத் தெள்ளெனத் தெரிக்கும்
அரிய கருத்துகள் அவையென அறிந்தால்
மறைபொருள் பலவும் மலர்த்துவ என்போம்.
இறைநிலை அதனால் இன்பமும் பெறலாம்
அறமே அவையென அறிந்தும் கொள்ளலாம்
மறமென நினைப்பதும் வழமை ஆயினும்
எல்லாம் ஒன்றின் எழில் மிகு வடிவாம்
அல்லன என்பதும் அழியா ஒன்றின்
பலவடி வாமெனப் புரிந்து கொள்ளலாம்
நிலமிசை அதுவே நிலைத்த பொருளெனின்
செய்திகள் எல்லாம் செப்புவ ஒன்றே
செய்திகள் என்பதைச் செய்தி ஒன்றெனப்
பெரியோன் யோகன் புகன்றதை அறிவீர்
உம்முடன் இருந்தும் ஒன்றை அறியீர்
அம்மா பொருளிது அறிமின் என்றான்
"இறைவன் உம்மோடிருப்பதை அறியீர்
இது தான் ஒன்றே செய்தி என்பேன்"
என்று சொன்ன யோகன் தன்னை
இன்றும் வழுத்தி இருமின் சும்மா
அதனால் உண்மை நாடி உழைத்து வாழ்மின்
உயர்சிவ தொண்டனை உணர்ந்து வாழ்த்துமின்
வாழ்க சிவதொண்டன் வாழ்க வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதையில் மலர்ந்த எண்ணங்கள்-II

## இயற்கைச் செயல்

### 2.1 ஆன்மாவும் இயற்கையும்

செயலுக்கும் ஞானத்துக்கும் இடையேயுள்ள சரியான உறவை நிர்ணயிப்பது மிகவும் கடினம். ஆனால், செயல் என்றால் என்ன, ஞானம் என்றால் என்ன என்ற நமது கருத்துத் தெளிவாகும்வரைக்கும் மட்டுமே அந்த உறவை நிர்ணயிப்பது கடினமாக இருக்கும். ஒருவர் செயலில் ஈடுபடுகின்றார் எனக் கூறும்போது, அவர் ஒரு தனியனா அல்லது கூட்டுப் பொருளா என்று எண்ணுவது இல்லை. அவர் ஒரு கூட்டுப்பொருள் எனில், அக்கூட்டுப் பொருளில் எவை செயலைச் செய்கின்றன, எவை செயலைச் செய்யவில்லை என்பதை நாம் அறிவதற்கு அகமுக ஆய்வை அல்லது எண்ணங்களின் பகுப்பாய்வைச் செய்யும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு ஆய்வை மேற்கொள்ளும் வரை, கூட்டுப்பொருளில் எவை செயல் செய்கின்றன, எவை செயலைச் செய்யவில்லை என்ற வினாக்கள் இயல்பானவையாக இருந்தபோதும், நமக்குக் குழப்பத்தையே தரும். ஆனால் கீதாசாரியன் அவற்றுக்கு விடையளிக்காமல் விடவில்லை. கீதாசாரியன் கருத்துப்படி, ஒவ்வொரு செயலிலும் உள்ள 'செய்பவன்' ஒரு கூட்டுப்பொருள் ஆகும். அக்கூட்டுப் பொருளான 'செய்பவன்' என்பதில் அவனது 'ஆன்மா',அவனது 'இயற்கை' என்ற இரண்டு அம்சங்கள் உள்ளன. உண்மையில் 'செயல்' என்பதற்குக் காரணமாக அமைவது 'இயற்கை' ஆகும். ஆனால், 'ஆன்மா' எப்பொழுதும் செயலற்றது. இதனாலேயே கீதாசாரியன் "செயல்கள் அனைத்தும் இயற்கையினால் செய்யப்படுகின்றன என்றும் ஆன்மா செயலற்றது என்றும், எவன் காண்கின்றானோ அவன் உண்மையைக் காண்கின்றான்" *(13-19)* என்று கூறியுள்ளார்.

எனவே யாராவது ஒருவன் தான் செயலில் ஈடுபடுகிறான் என்று கூறும்போது அவனுக்கு 'ஆன்மா', 'இயற்கை' என்பவற்றின் குழப்பமும் வந்துவிடுகிறது. இதனை இயற்கையின் குணங்களால் செயல்கள் நடைபெறுகின்றன, அகங்காரத்தால் ஏற்படும் மயக்கம் காரணமாக 'நான் செய்கிறேன்' என்று மனிதன் நினைக்கின்றான் என்கிறது கீதை. அதற்குக் காரணம், தனது இயற்கையில் இருந்து தனது ஆன்மா வேறுபட்டது என்ற எண்ணம் அவனிடம் இல்லாமையே. இதனால் தன்னைப்பற்றி அறிய முயற்சிக்காத அவன் தனது இயற்கையோடு தனது ஆன்மாவை இனங்காணுகின்றான். ஆன்மா பற்றிய இந்தப் பிழையான கருத்து அல்லது தன்னில் இருந்து 'நான்' என்பது வேறுபட்டது என்பதே செயலைத் தனக்கு உரியதாக்குவதற்கான பிரதான காரணமாகும். ஆனால் செயல் இயற்கையோடு மட்டும் தொடர்புடைய ஒரு விடயமாகும். ஆனால் அவன் தன்னை அச்செயலோடு அல்லது இயற்கையோடு குழப்பிக் கொள்கின்றான்.

முடிவான அறிவு, இந்தக் குழப்பத்தில் இருந்து பூரணமாக விடுதலை பெற உதவுகிறது. ஆனால் செய்பவன் செயலுக்கு உரிமை கோருவதே குழப்பத்துக்குக் காரணம். செயல்களின் இருப்பையும் ஆன்மாவின் இருப்பையும் இணைக்க முடியாது. ஏனெனில், செய்பவனே அக்குழப்பத்தைத் தானே உரிமை கோருவதனால் உருவாக்குகின்றான். செயல்கள் அதற்கு உரிமை கோரல், செய்பவன் என்ற கருத்துக்கள் இருக்கும்வரை அதைச் செய்பவன் உண்மையான அறிவு உடையவன் என்று கூற முடியாது. உண்மை அறிவு அல்லது உண்மை ஞானம், அந்தச் செய்பவன் என்ற கருத்தையும் அவனது செயல் என்ற கருத்தையும் இல்லாமல் செய்துவிடும். எனவே செயலுக்கும் ஞானத்துக்கும் இடையே எந்தவிதமான இணைப்போ, ஒன்று பெரிது மற்றையது சிறிது என்ற பேதமோ இருக்க முடியாது. செயலையும் ஞானத்தையும் ஒன்று சேர்க்கலாம் என்ற தவறான கருத்தை ஏற்றால் மட்டுமே அவற்றிடையே இணைப்பு அல்லது பேதம் சாத்தியமாகும். இதிலிருந்து அறிஞனாக வர உள்ள ஒருவனுக்குச் செயல்கள் பிரயோசனமற்றவை என்ற முடிவுக்கு வரவேண்டிய அவசியமில்லை. உண்மையில் அவனுக்குச் செயல்கள் மிகவும் பிரயோசனமானவையே. செயலற்ற, இலட்சியத்தை நோக்கி முன்னேறும்போது அவனுக்கு ஒரு கட்டத்தில் அவை தேவையானவை. மறுவார்த்தைகளிற் கூறின், செய்பவன் என்ற கருத்து 'நான்' என்ற கருத்தோடு அக்கட்டம் வரை இணைந்தே இருக்கிறது. எனவே, 'நான்' என்ற கருத்து இருக்கும்வரை செய்பவன் என்ற கருத்தை இல்லாமல் ஆக்குவது சாத்தியமில்லை. அந்த 'நான்' என்பது அதனோடு கூடியுள்ள ஆன்மாவை உணர்ந்ததும் மறையும். 'இயற்கை' அவனுக்குப் போலியான 'நான்' என்ற கருத்தை வழங்குகின்றது. அந்த இயற்கையைக் கடக்கும்போது ஆன்மா தன்னை உணருகிறது. அந்த நிலை வரும்வரை யாரும் செய்பவனாக இருப்பதிலிருந்து விடுதலை அடைய முடியாது. கீதாசாரியனது வார்த்தைகளிற் கூறின், ஒரு நிமிடம் கூட யாரும் செயலற்று இருக்க முடியாது (3.5). உடலோடு கூடிய ஆன்மாவுக்குச் செயல்களை முற்றாகக் கைவிட முடியாது (18.11). அவ்வாறு இயற்கையைக் கடக்காதவர்களும் ஆன்மாவை உணராதவர்களுமான எமக்கெல்லாம் உள்ள ஒரே ஒரு வினா 'நாம் ஈடுபடவேண்டிய செயல்கள் யாவை?' என்பதே. இதற்கு எமக்கு மூன்று மாற்றுவழிகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன:

**அ**.இயற்கையின் தயவில் மட்டும் நாம் இருந்து கொண்டு, அது தான் விரும்பியபடி எம்மை இழுத்துச் செல்ல அதனை நாம் அனுமதிப்பது.

**ஆ**.இயற்கைக்கு ஏற்ற செயல்களில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டு அதன் ஆற்றலை ஓரளவு குறைக்கக் கூடிய செயல்களில் ஈடுபடுவது.

**இ**.நாம் இயற்கையை நேரடியாக அடக்கி அதனை அழித்துக் கொள்ளும் நோக்குள்ள செயல்களில் மட்டும் ஈடுபடுவது.

இயற்கையைக் கடக்க விரும்பும் ஒரு சாதகனுக்கு முதலாவது மாற்று வழி பொருந்தாது. அவன் மூன்றாவது மாற்று வழியைப் பின்பற்றுவதற்கு சங்கல்பம் செய்யும் ஆற்றலும் பொறுமையும் அதிகம் தேவையாக இருப்பதனால் அதுவும் பொருந்தாது. எனவே பின்பற்றக்கூடிய இலகுவான வழி இரண்டாவதே ஆகும். அதாவது சாதகன் தனது இயற்கைக்குப் பொருத்தமான செயல்களில் ஈடுபடும் அதேவேளை அவற்றின் பந்திக்கும் தன்மையைக் குறைப்பதே முன்னேறுவதற்கு ஏற்ற வழி. கிருஷ்ண பரமாத்மா கீதையில் இரண்டாவது மூன்றாவது மாற்று வழிகள் இரண்டையும் பரிந்துரைக்கின்றார். ஆனால் மூன்றாவது வழியைப் பின்பற்ற நடைமுறையில் இடையூறுகள் பல இருப்பதனால் அவர் சாதாரண சாதகன் ஒருவனுக்கு இரண்டாவது வழியையே அழுத்தமாகக் கூறுகின்றார். இதனை 'கர்மஸன்யாஸம்', 'கர்மயோகம்' என்ற இரண்டுமே மிக உயர்ந்த பேரின்பமான மோட்சத்துக்கு வழிகாட்டும். ஆனால், கர்ம யோகமே கர்மஸன்யாஸத்தை விட உயர்ந்தது என்கிறது கீதை (5.2).

## 2.2 செயல்களின் வகை

செயல்களைப் பகுப்பாய்வு செய்தால் அவற்றைப் பிரக்ஞையோடு செய்யப்படுவன என்றும் பிரக்ஞை இல்லாது செய்யப்படுவன என்றும் அறிவோம். அதாவது சில செயல்களில் மனம் சேர்ந்திருப்பதையும் சில செயல்களில் மனம் சேராதிருப்பதையும் அறிவோம். செயலின் வரைவிலக்கணத்துடன் மனம் சேராதிருக்கும் செயலையும் உள்ளடக்குவது பொருத்தமன்று. தான் செய்கின்றபோது செய்யும் எண்ணம் இல்லாதவனைச் செய்பவன் என்று அழைக்க முடியாது. மூச்சு விடுதல், செரிமானம், இரத்தம் உடலோடு சேர்தல் முதலான செயல்களை இப்போதைக்கு ஒருபுறம் ஒதுக்கி வைப்போம். அவை அனிச்சைச் செயல்கள். மனமும் சேர்ந்து செய்யும் செயலைப் பொறுப்புள்ள செயல் என அழைப்போம். முன்னர் குறிப்பிட்டதுபோல பொறுப்புள்ள செயல்களை மூன்றாக வகுக்கலாம். அவையாவன :

**அ**.இயற்கை வயப்பட்ட இயற்கைச் செயல்கள்.

**ஆ**.ஓரளவு மட்டும் இயற்கை வயப்பட்ட ஆனால் படிப்படியாக அதனைக் குறைக்கும் உகந்த செயல்கள்.

**இ**.இயற்கையை அடக்கி அதனை முற்றாக நீக்கும் நோக்கமுள்ள வலிமைச் செயல்கள்.

நம்மில் பெரும்பாலானவர்கள் முதலாவது மாற்று வழியை மேற்கொள்ளும் கட்டத்திலேயே இருக்கின்றோம். நாம் இயற்கை தன் எண்ணப்படி எம்மை நடாத்த விடுகின்றோம். எனவே இந்த முதலாவது கட்டத்தில் இருந்தே எமது ஆய்வை ஆரம்பிப்போம். இந்த ஆன்மாவுக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள குழப்பம் மிக அதிகம். அதனால் அவற்றை வேறுபடுத்துவது இக்கட்டத்தில் மிகவும் கடினம். இங்கு ஆன்மா தனக்குச் சுதந்திரமான இருப்பு உள்ளமையை மறந்து விடுகிறது. அதனால் இயற்கை எல்லாவகையான செயல்களையும் செய்ய ஒருவன் தன்னை அனுமதிக்கிறான். இந்தக் கட்டத்தில் உள்ள ஒருவன் தானே செய்பவன் அல்லன். அவன் தன்னை இயற்கையின் கைகளில் விட்டுவிட்டுத் தான் வாளாதிருக்கிறான். இதனால் அவன் செய்விக்கப்படுகின்றவன் ஆகின்றான் (3.5). ஆனால் தான் செய்விக்கப்படுகின்றவன் என்பதையும் அவன் உணர்வதில்லை. அதற்குப் பதிலாக அவன் தானே செய்பவன் என்று எண்ணுகின்றான். எனவே அங்கு இயற்கைக்கும் அவனுக்கும் இடையே குழப்பம் நிறைவானதாக உள்ளது (3.2).

## 2.3 இயற்கைச் செயல்

நாம் வகுத்துக்கொண்ட மூவகைச் செயல்களுள் ஒன்றான இயற்கைச் செயலை மேலும் மூன்று உப பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன :

**அ**.மனம் முற்றும் சம்பந்தமில்லாத இயற்கை மட்டுமே செயல்படுத்தும் சக்தியுள்ள செயல்கள்.

**ஆ**.இயற்கையில் பிறந்த மனவேகம் செயல்படுத்தும் சக்தியுள்ள செயல்கள்.

**இ**.இயற்கையில் பிறந்த மனவேகம் சங்கல்பத்தால் பலப்படுத்தப்பட்ட செயல்கள்.

எனவே, பொறுப்புள்ள இயற்கைச் செயல்களின் வடிவங்களை மூன்று வகையில் அறிந்து கொள்ளலாம். அவையாவன:

1. இயல்பூக்கச் செயல்கள்
2. மனவேகச் செயல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சங்கல்பச் செயல்கள்

இங்கே இந்த மூன்று வார்த்தைகளின் அர்த்தத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றை வேறுபடுத்தி அறிய உதாரணத்தைப் பயன்படுத்துவதே ஓர் இலகுவான வழி. ஒரு தேள் என்னைக் கொட்டினால் நான் செய்யும் முதல் வேலை அதனை உடலினின்றும் நீக்கி மீண்டும் தேள் கொட்டாமல் பார்த்துக் கொள்வதாகும். இரண்டாவது வேலை, அதன் மீது வெறுப்புக்கொண்டு அதன் மீது கோபம் கொள்வதாகும். மூன்றாவதாக அந்தத் தேளைக் கொல்வதோடு காணும் மற்றைய தேள்களையும் கொல்வதாகும். இங்கு நோவை நீக்குவது இயல்பூக்கமாகும். அந்நோவை உருவாக்கிய தேளை விலக்குவது மனவேகம். அந்நோவை உருவாக்கிய தேளை வெறுப்பது சங்கல்பம்.

இதேபோல இன்பத்தைத் தேடுவது இயல்பூக்கத்தால் ஆகும். அந்த இன்பத்தைத் தரும் பொருளால் மனவேகம் வருகிறது. அந்த இன்பத்தைத் தரும் பொருளில் தீவிரஆசை கொள்வது சங்கல்பம்.

## 2.4 இயல்பூக்கம்

மேற்கூறியவற்றிலிருந்து இயல்பூக்கம் மிகவும் சூக்குமமான கருத்து என்பதும் அதனை வரைவிலக்கணத்துள் கொண்டு வருவது கடினம் என்றும் தெளிவாகிறது. அதன் வேலை துன்பத்தை விலக்குவது அல்லது இன்பத்தைத் தேடுவதாக அமையும். பசி ஓர் இயல்பூக்க உணர்ச்சி. அதனைத் தணிக்க குறிப்பிட்ட ஏதாவது ஒரு வழியை மட்டும் பரிந்துரைக்க முடியாது. பசியைத் தள்ளி வைப்பதற்கு ஏதாவது ஓர் உணவு மட்டுமே தேவைப்படும். பிரதானமாக இயல்பூக்கத்தினால் மட்டுமே வழிநடாத்தப்படும் மிருகங்கள் தாமாகவே தமது உணவை விரும்புவதோ அதனை நோக்கிக் கவரப்படுவதோ இல்லை. உணவு அவற்றுக்கு ஒரு தினசரி அனுபவமே. அவற்றின் பசி தணிந்ததும் எஞ்சிய உணவுக்கு என்ன நடக்கும் என்று அவை அக்கறை கொள்வதில்லை. மீண்டும் பசி வரும்வரை உணவைப் பற்றி எண்ணுவதேயில்லை. மிருகங்களுக்கு உணவு வேண்டுமென்றும் அதனை அவை விரும்புவதில்லை என்றும் எம்மால் கூற முடியும். ஒரு பசு தனது கன்றை இயல்பூக்கத்தினாலேயே நக்குகின்றது. அதன் மடி பால் நிறைந்து அழுத்தும் துன்பத்தை நீக்கவே அப்பசு தனது கன்றை நக்குகின்றது. அது தனது கன்றை நக்குவது அதன் மீதுள்ள பாசத்தினாலன்று. எம்மைப் பொறுத்தவரை, அந்நிகழ்ச்சியை அந்த வகையிலேயே புரிந்துகொள்ள முடியும். இந்த உதாரணங்களிலிருந்து மிருகங்களுக்கு மனம் என்று ஒன்று முற்றாக இல்லை என்று கூற முடியாது. ஆனால் மிருகங்களுடைய மனம் பிரதானமாக அவற்றை இயக்கும் சக்தியாக இருப்பதில்லை. அதனால் அவை இயல்பூக்கத்தினாலேயே நடந்து கொள்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவற்றின் மனத் தூண்டுதல்களும் சங்கல்பங்களும் இயல்பூக்கத்தின்படியே செயல்படுகின்றன. அவை தமது உயிர் வாழ்க்கையைப் பேணிக்கொள்வதற்காகவே அவ்வாறான இயல்பூக்கத்தின்படி செயல்படுகின்றன. மிகக் கீழ்மட்டத்தில் உள்ள விலங்குகளுக்கும் மிக உயர்ந்த ஆன்மிக ஆர்வலர்களுக்கும் இயல்பூக்கம் என்ற அம்சம் பொதுவானதே. எனவே இந்த நிலையிலுள்ள மனம் பெரும்பாலும் தானாகவே செயல்படுவதனால், புண்ணியம்,பாபம் என்ற கருத்துக்களைச் சாஸ்திரங்கள் கொண்டு வருவது பொருத்தமற்றது. எனவே மிருகங்களுடைய இயல்பூக்கச் செயல்பாடுகளுக்கோ பைத்தியங்களின் செயல்பாடுகளுக்கோ வெகுமதிகளை அல்லது தண்டனைகளை பற்றிச் சாத்திரங்கள் கூட எதையும் பரிந்துரைப்பது கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்கு இயல்பூக்கங்கள் மட்டுமே உள்ளன. இதனால் அவர்களைப் பேணிப் பாதுகாத்து வருபவர்களே அவர்களின் பொறுப்புக்களின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, அம்மூன்று பகுதியினரையும் விட்டுவிட்டு, அவ்வாறான செயல்களின் ஒரு பகுதிப் பொறுப்பை எவர் தகுந்த கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு அவர்களை வழிப்படுத்தி, ஏனையோர் நடந்து கொள்ள வேண்டும். சாதாரண ஆர்வலர்கள் தமது செயல்களின் முழுப் பொறுப்புக்களுக்கும் தாமே உரியவர். " தமது உடலைப் பேணுவதற்காக மட்டுமே மூன்றாவது வழிக்குப் பதிலாக இரண்டாவது வழியையே" (4.2) இது பற்றிக் கீதையில் கிருஷ்ணர் பரிந்துரை செய்கின்றார்.

## 2.5 மன வேகம்

இயல்பூக்கத்தைத் திருப்தி செய்யும் அல்லது அவ்வியல்பூக்கத்துக்கு இடையூறாகும் பொருளினால் மனதில் ஓர் அடையாளம் ஏற்படும் போது அம் மனவேகத்தின் உயர்மட்டம் அடையப்படுகிறது. இந்த மட்டத்தில் ஒருவருக்கு ஒப்பீட்டு ரீதியில் நல்லது அல்லது தீயது என்ற புலனறிவு ஏற்படுகின்றது. அவரது இயல்பூக்கத்தின்படி, துன்பத்தை விலக்கும் அல்லது இன்பத்தைப் பெறும் பொருட்டு ஒரு பொருளில் விருப்பம் அல்லது வெறுப்புப் புலன் அறிவாக வந்து அமைகிறது. எதிர்பார்க்கப்படுவது போல, ஒரு பொருளுக்கும் அதுதரும் இன்பதுன்பங்களுக்கும் இடையே தொடர்பின் முன்னைய இன்பங்களின் விளைவாக வந்து அமைகிறது. அந்தப் பொருளின் அனுபவங்களோடு தொடர்பு கொள்வதில் அநுபவிப்பவரின் இன்ப துன்பங்கள் வந்து அமைகின்றன. உதாரணமாக, ஒரு மிருகம் மட்டுமே சவுக்கைப் பார்த்து பயப்படுவதற்கு, முன்பு அந்த சவுக்கினது அடியை உணர்ந்திருக்க வேண்டும். எனவே பயம் என்பது ஒரு மன வேகமே. அந்த மனவேகம் பயத்திற்குக் காரணமான பொருளின் வெறுப்புப் பற்றிய புலனறிவால் வருவதாகும். ஒரு பொருளுக்கும் அதன் அநுபவத்துக்கும் இடையே உள்ள எல்லா அநுபவங்களையும் ஒருவர் ஞாபகப்படுத்திக் கொள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய அவசியமில்லை. அந்த அநுபவங்கள் எல்லாம் இயல்பை ஒழுங்குபடுத்தி அமைப்பதிலும் மன வேகத்தின் செறிவிலும் தமது பங்கைச் செலுத்துகின்றன. எனவே அவை ஒருபோதும் இழக்கப்படுவதில்லை. ஆனால், அவை மீண்டும் வெவ்வேறு வடிவங்களில் தோன்றுகின்றன. மனவேகத்தினது மூலவேர் அநுபவங்களிலேயே இருக்கின்றது. ஆதலால், அவ்வநுபவங்கள் நீண்ட காலமாக இருந்து வந்தாலும் நிகழ்கால அநுபவங்கள் போலவே இருக்கின்றன. ஆனால் அக் கடந்தகால அநுபவங்களின் தன்மை எவ்வாறு பாதிக்கக்கூடுமென்று நம்மால் இப்பொழுது கூற முடியாதுள்ளது. எனவே இந்த மன வேகங்களைத் தடுப்பது இப்போது சாத்தியமில்லை என்று அதிலிருந்து அறிய முடிகிறது. அதுவும் ஒரு குறித்த பொருளை நாம் பார்க்கும் போது அம்மனவேகம் வருவதை நம்மால் பூரணமாகத் தடுக்க முடியாதுள்ளது. "அறிகின்ற மனிதன் கூடத் தனது இயல்பின்படியே செயலாற்றுகின்றான். எல்லா உயிர்களும் தமது இயல்பின்படியே செயலாற்றுகின்றன. எதுதான் அதைத் தடுக்க முடியும்" *(3.33)* என்று கிருஷ்ணன் கூறுகின்றார். "கவர்ச்சியும் காழ்ப்பும் ஒவ்வொரு புலனால் அறியப்படும் பொருளிலும் இயல்பாகவே உள்ளன" *(3.34)*. நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த செயல் எமது சங்கல்பத்தைப் பயன்படுத்துவதே. செயல்களுக்கு எம்மைத் தூண்டி விடுகின்ற மனவேகத்தைச் சங்கல்பத்தினால் தடுத்து விடலாம். அதுவும் புத்தி ஏற்றுக்கொள்ளாத செயல்களை சங்கல்பத்தினால் தடுத்துக் கொள்வதே சிறந்த வழியாகும். பகவானின் வாக்கின்படி "ஒருவர் இந்தக் கவர்ச்சி,காழ்ப்பு என்ற இரு விடயங்களுக்கும் அடிமை ஆகாமல் இருக்க வேண்டும்.ஏனெனில் அவை இரண்டும் ஒருவருடைய முன்னேற்றப்பாதையில் தடைக்கற்களாக இருக்கின்றபடியினாலாகும்" *(3.34)*. எமது சங்கல்பம் பலவீனமாக இருக்குமானால் அல்லது எம்மைக் கவனமில்லாமல் இருக்க எம்மை அனுமதிப்போம் ஆனால் நாம் எம்பாட்டில் இருந்தாலும் கூட மனவேகம் எம்மைச் செயலாற்ற வைப்பதற்குப் போதுமானது. அர்ச்சுனனின் அறுதியான வினா "அவ்வாறு செய்யத் தூண்டுவது போல ஒருவருடைய சங்கல்பத்துக்கு எதிராக அவரைப் பாபம் செய்ய வைப்பது எது" என்பதே*(3.36)*. "அதுவே ஆசை ; அதுவே எதிர்ப்பு. அது இராட்சத குணத்தன்மையிலிருந்து பிறக்கின்றது" *(3.37)* என்பது அந்த வினாவுக்குக் கிருஷ்ணன் வழங்கும் பதிலாகும். இறுதியில் கிருஷ்ணன் அர்ச்சுனனை மேல்வருமாறு எச்சரிக்கின்றார். "நீ யுத்தம் செய்யப் போவதில்லையென்று உனது சொந்தச்சங்கல்பத்தினால் எண்ணினாலும் உன்னுடைய அந்த முயற்சி பயனற்றதே.ஏனெனில், உனது இயல்பே உன்னை யுத்தம் செய்யுமாறு ஆக்கி விடும். அறியாமையினால் இப்பொழுது எதனை நீ செய்யப் போவதில்லை என்று எண்ணுகின்றாயோ அதனையே நீ செய்து விடுவாய். ஏனெனில் உனது இயல்பில் பிறந்த உனது சொந்தச் செயல்களினால் நீ கட்டுப்பட்டிருக்கின்றாய்." *(18.59-60)*

### 2.6 சங்கல்பம்

இயல்பானசெயலினது அடுத்தவகை, சங்கல்பம்தனது பங்கைச் செலுத்தும் இடத்திலே உள்ளது. இயல்பூக்கம், மனவேகம் என்பன சொல்லுகின்றபடி உணர்ந்து மேற்கொள்வதே சங்கல்பத்தின் குறிக்கோளாகும். இங்கே சங்கல்பம் பணிவாகச் செயலாற்றுவதில் திருப்தி கொள்வதில்லை. ஆனால் , அச்சங்கல்பம் விசேட செயல் வடிவங்களை தானே கண்டுபிடித்துச் செயல்படும் தொழிலையே மேற்கொள்கிறது. அந்த விசேட செயல் வடிவங்கள் ஒருவரின் இயல்பூக்கம், மனவேகம் என்பவற்றின்திருப்தி அவரைக் காத்துக்கொள்ளும். இந்தக் கட்டத்தில் உள்ள ஒருவர் தான் பசியாக இருக்கும் வேளையில் மட்டும் உணவைத் தேடுவதில்லை. அல்லது உணவைப் பார்க்கும் போது மட்டும் அதனால் கவரப்படுவதும் இல்லை.ஆனால் அவர் உணவின் மேல் அன்பு வைத்துக் கொள்வார். தனக்குப் பசியில்லாது போனாலும் கூட அவ்வுணவை வைத்திருப்பதற்காக அவர் அதனைத் தேடிச் செல்வார். அவ்வுணவை தான் பெற்றுக் கொள்ள முடியாது என அறியும் போதும் இதனால் தானாகவே கவரப்படும் உணர்ச்சி உள்ளவராக இருப்பார். தனது கடந்தகால அநுபவக் களஞ்சியத்தின் மூலம் அவ்வுணவை நாடி அவர் செயல்படுவார். அந்த அநுபவங்களே தனக்கு இன்பம் தரத்தக்க பொருள் என்று அவரை அதை நோக்கி இயங்கச் செய்யும். இன்பம் தரும் பொருளை அல்லது துன்பத்தை விலக்கும் பொருளை நோக்கமாகக் கொண்ட எல்லாத் திட்டமிட்ட வகைச் செயல்களும் இதன் கீழ் வருகின்றன. ஒருவரின் மனதின் முன் அவ்வாறான பொருள் இருக்க வேண்டும். அத்துடன் அவரது சங்கல்பம் அந்தப் பொருளை அடைவதை நோக்கி நெறிப்படுத்தப்படல் வேண்டும். ஆனால் சங்கல்பம் எப்போதும் குறிக்கோளாற்றல் உடையதாக இருப்பதில்லை. எனினும் இந்தக் கட்டத்தில் அது எடுத்துக் கொள்ளும் பங்கு மிக முக்கியமானதாகும். எனினும் அது இயல்பின் சொற்களுக்கு கீழ்ப்படிவதாகவே இருக்கும். இங்கு சங்கல்பம் ஒரு கருவியாகவே மட்டும் இருக்கும். அது எவ்வளவு திருத்தமாக அமைக்கப்பட்டதாயும் பயனுள்ளதாயும் இருந்த போதிலும் அது இயல்பின் கைககளிலேயே இருக்கும். அந்த இயல்பு அல்லது இயற்கைதான் "செயலாற்றுபவர்" அல்லது உண்மையில் இயக்கும் சக்தி ஆகும். எனினும் , ஒருவர் தன்னை செய்பவராகவே வைத்துக் கொள்வார். ஆனால் சங்கல்பம் என்ற வார்த்தையின் பூரண கருத்தில் அவர் செயல்படுபவர் அல்லர். ஆனால் அவர் தன்னோடு பிறந்த இயல்பின் சொற்களுக்கு அடங்கியே செயலாற்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறிவந்தவற்றில் இருந்து இயல்பூக்கம், மனவேகம், சங்கல்பம் என்ற மூன்று இயற்கைச் செயற்பாடுகளின் வகைகளையும் அவதானிக்க முடியும். இவை மூன்றும் முறையே தேவை என்ற உணர்வு, விரும்பக்கூடியது என்ற உணர்வு, விருப்பம் என்ற உணர்வு ஆகியவற்றை உடையனவாம். வேதத்தின் கர்ம காண்டம் பெரும்பாலும் இவ்வாறான செயல்பாடுகளிலேயே தனது கருத்தைச் செலுத்தி வருகின்றது. எனவே வேதத்தின் குறிக்கோள் இந்தத் தேவையைத் திருப்தி செய்வதிலும் இந்த விரும்பக்கூடிய தன்மையை வெளிப்படுத்துவதிலும் இந்த ஆசையை ஒழுங்குபடுத்துவதிலும் இருக்கின்றது. அவை ஒருவரின் ஆன்மீக ஈடுபாடுகளுக்கு மிகக் குறைவான பாதக விளைவையே வைத்துக் கொள்கின்றன. கர்ம காண்டமானது இயற்கை அல்லது இயல்பை இல்லாமல் அழிப்பதை இலக்காகக் கொள்ளவில்லை. ஒருவரின் ஆன்மீகப் பாதுகாப்புக்கு உகந்த திருப்தியை மட்டுமே அது இலக்காகக் கொள்கிறது. ஆன்மிகப் பாதுகாப்பு என்று இங்கே குறிப்பிடுவது இருக்கும் ஆன்மிக நிலையிலிருந்து கீழிறங்காமல் வைத்துக் கொள்வதைக் கருதும். ஆனால், அது ஆன்மிக முன்னேற்றப் பாதையில் எந்தவிதமான உயர்வையும் தரப்போவதில்லை. ஒருவர் ஒரு குறித்த செயலைச் செய்து அதன்படி அதற்கான பலனைப் பெறுவர். இதனால் அவர் அதே செயலைச் செய்ய மீண்டும் தூண்டப்படுவார்.அதன் மூலம் அதே பலனை மீண்டும் பெறுவார். "வேத தர்மத்தில் அடைக்கலம் புகுந்த ஒருவர் இன்பம் தரும் பொருட்களுக்காக மட்டுமே அவற்றைச் செய்வார். அவர்கள் அதற்காகச் சென்று மீண்டும் அதே பலனைத் திரும்பப் பெறுவர் (9.21) என்று பரமாத்மா குறிப்பிடுகிறார்.உண்மையான ஆன்மாவை அடைவதை நோக்கி எவ்வித முன்னேற்றத்தையும் கர்மகாண்டத்தைப் பின்பற்றுவதால் அடைய முடியாது. இயற்கையின் சேவைக்கு சங்கல்பத்தையும் கீழ்ப்படியச் செய்யும் எந்த வகைச் செயலிலும் சரணபுகுவது உண்மை ஆன்மாவை அடைய முற்றும் போதுமானதாகும். நாம் இது வரை ஆராய்ந்து வந்த மூன்று வகை இயற்கைச் செயற்பாடுகளும் ஒருவரின் இயல்பு நிலையை ஆராய்வதற்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை. அதற்கு ஒருவர் உயர்ந்த வடிவிலான செயல்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும். அவ்வாறான ஒருசெயல் இயற்கையின் உள்ளார்ந்த ஆற்றலைக் குறைக்கக்கூடியதாக அமையும். எனவே, அதன் மூலம் அதன் பந்தப்படுத்தும் தன்மையிலிருந்து ஒருவர் தன்னை விலக்கிக் கொள்ள முடியும். இதனாலேயே கீதை அவ்வாறான செயல்களில் தனது கருத்தைப் பிரதானமாகச் செலுத்துகின்றது. கீதை நாம் இதுவரை ஆராய்ந்து வந்த மூன்று வகைச் செயல்களையும் விட உயர்ந்த செயல்களைப் பற்றியே தனது அக்கறையைச் செலுத்தி வருகின்றது. எனவே ஆன்மீக உயர்வை நாடும் ஆர்வலர்கள் நாம் இதுவரை ஆராய்ந்து வந்த மூன்று வகைச் செயல்களிலும் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை என்பதை உணர வேண்டும்.முன்னர் குறிப்பிட்ட மூன்று வகைச் செயல்களும் இரண்டு படித்தரங்களில் உள்ளன என்பதையும் கூறியிருந்தோம். அந்த இரண்டு படித்தரங்களும் மேல் வருமாறு:- (1) இயல்புக்கான ஓர் எல்லையை அனுமதிக்கும் செயல்கள். ஆனால் அவை அதேவேளை படிப்படியாக அந்த எல்லையின் அளவைக் குறைக்கும் தன்மையின (2) நேரடியாக இயற்கையை இல்லாமல் செய்யும் குறிக்கோளை உடைய செயல்கள். முதலாவது படித்தரத்தில் உள்ளவை உகந்த செயல்கள் எனப்படும். இரண்டாவது படித்தரம் உயர் இரகசியத்தை கூறும் செயல்கள் எனப்படும்.எனவே அடுத்து நாம் தொடரப் போவது உகந்த செயல்களைப் பற்றிய கருத்துக்களே. அதனைக் கீதையில் மலர்ந்த எண்ணங்கள் 3 ல் காண்போம்.

-தொடரும்

**ஒழுக்கமுடைமை**

ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்தது. ஒழுக்கமுடையார் எல்லாமுடையார். ஒழுக்கங்களாவன கொல்லாமை, கள்ளாமை, பிறர் வசை உரையாமை , பிறர் பொருள் கவராமை , தாழ்மை, பொய்யுரையாமை முதலியனவாம். எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத்தோடுஞ் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடுஞ் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச் செய்து பழகி வந்தால் மன உறுதி உண்டாகும். அதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்திற் புகுந்து கவலையை உண்டாக்காது. எல்லாம் என்னிடத்தே உண்டாகின்றன ;எல்லாம் என்னிடத்தே நிலைத்திருக்கின்றன ;எல்லாம் என்னிடத்தே ஒடுங்குகின்றன என்ற தூய்மையான எண்ணம் உடையவராய் இருத்தல் வேண்டும். மேலும் எனக்கொரு குறைவுமில்லை. என்னிடத்திலே எல்லோரும் அன்பாய் இருக்கிறார்கள் ;நானும் எல்லாரிடத்தும் அன்பாய் இருக்கிறேன் என்று அடிக்கடி நினைந்து நினைந்து சாதிக்க வேண்டும். இப்படியே இடைவிடாமற் பழகி வந்தால் எல்லாமறியும் ஆற்றலும் எல்லாஞ் செய்யும் வல்லமையும் எளிதிற் கைவரும்.

**-நற்சிந்தனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாசதீய சூக்தம் ( தொடர்ச்சி....)

மனிதன் ஐம்புலன்களையும் கொண்டு புற உலகப் பொருள்களை அறிந்து கொள்ளுகின்றான். மனமும் புலன்களோடு தொடர்பு வைத்துக் கொண்டால் மட்டுமே அப்புலன்களைப் பயன்படுத்திப் புற உலகப் பொருள்களை அறிந்து கொள்கின்றான். ஆனால், புற உலகப் பொருள்களை அவன் மட்டுமன்றி மிக நுண்மையான கருத்துக்களையும் உணர்வுகளையும் அவன் புரிந்து கொண்டு அவற்றைச் சிந்திக்கவும் ஏனையவர்களுக்கு அவற்றைத் தெரிவிக்கவும் அவனால் முடிகின்றது. நாசதீய சூக்தத்தை வெளிப்படுத்திய இருடியின் சாதனை மிகமிக உயர்ந்ததே. அவர் இந்த சூக்தத்தில் பல கலைச் சொற்களை உருவாக்கிப் பயன்படுத்தி உள்ளார். அவருக்குப் பின்வந்தவர்கள் இக்கலைச் சொற்களை இந்திய தத்துவ வகைகளில் உபயோகிக்கலாயினர். இந்தச் சூக்தத்தை வெளிப்படுத்திய முனிவரின் பெயர் பரமேஷ்டி பிரஜாபதி என்று கூறப்பட்டு வருகிறது. ஆனால் அவர் உண்மையாய் ஒரு முனிவர் எனக் கொள்வதைக் காட்டிலும் ஓர் எண்ணத்தை ஆளாக உருவகிக்கப்பட்டிருக்கின்றார் எனக் கொள்வதே மிகப் பொருத்தமானது எனலாம். புலன் கடந்த நிலையில் தானாகவே தோன்றிய சுயம்பு என அவ்வெண்ணம் கருதப்படுகின்றது. தானாகத் தோன்றிய சுயம்பு அல்லது தானாகவே உள்ளது பூரணம் ஆகும். அந்தப் பூரணம் எல்லாவிதமான எதிர்வு கூறலையும் கடந்தது. இச்சூக்தத்தில் வரும் தானாகவே உள்ள எல்லா வகையான இரட்டைகளையும் அது கடந்ததாகும். இச்சூக்தத்தின் முதலிரண்டு மந்திரங்களும் இரட்டை வடிவங்கள் சிலவற்றையே கூறுகின்றன. அவையாவன மரணம் - மரணமின்மை, ஒளி - இருள், பிராணன் - வாயு, சத் - அசத், பரம் - அபரம் முதலானவையாம். தந்தைத் தத்துவம் என்ற சுயம்புவையே பின்னர் வந்தோர், தோன்றி உள்ள பிரபஞ்சத்தின் பிற்காலத்து மூலம் என்பர். பிரஜாபதி பரமேஷ்டி தன்னை ஒரு இரட்டை என்ற பொருளில் தோற்றத்துக்கு வந்துள்ள உலகின் அன்னை பற்றிய தத்துவத்தைப் பிரதிபலிக்கின்றார். அது பிரபஞ்சத் தோற்றத்துக்கு அடிப்படை. அது இரட்டையின் தளத்தையும் பிரதிபலிக்கின்றது. அச்சுயம்புவே பிரபஞ்சம் தோன்றுவதற்கு அடிப்படையானதுமாய் உள்ளது. எனவே பிரபஞ்சம் அல்லது பரமேஷ்டி இத்தோத்திரத்தில் அடக்கப்படுகின்றது . அதனை பிரபஞ்ச உருவாக்கத்துக்குப் பொறுப்புள்ள முனிவர் எனலாம். பண்டிதர் ஓஜாவின் கருத்துப்படி இத்தோத்திரம் அநேக கொள்கைகளைக் குறிக்கின்றது. அவற்றையே பிரபஞ்ச வித்தை கவிதை வடிவில் கூறுகிறது. இதனால் கவிதை வடிவில் சிருஷ்டி வித்தையை அம்மொழி வடிவில் கூற அம்முனிவர் முயன்றுள்ளார். ஜயப்பூரில் இருந்த பண்டிதர் மதுசூதக ஓஜா என்பவர் இத்தோத்திரத்தைப் புரிந்துகொள்ள போதியளவு காலத்தையும் சிந்தனையையும் முயற்சியையும் செலவிட்டிருக்கிறார். இச்சூக்தத்தில் உள்ள முதலிரண்டு மந்திரங்களும் பத்து வித்தியாசமான நோக்குகளைக் குறிப்பிடுகின்றன என அப்பண்டிதர் குறிப்பிடுகின்றார். பிராமணங்களிலும் சங்கிதைகளிலும் வெவ்வேறு இடங்களில் அவை குறிப்பிடப்படுகின்றன. அவரது தசவாத இரகசியம் என்ற நூலில் அவர் அவற்றை விளக்கியுள்ளார். இந்தச் சூக்தத்தின் கொள்கைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் அப்பண்டிதருக்கு என்றும் நாம் கடப்பாடு உள்ளவர்களாக ஆவோம். இக்கட்டுரையில் அவரது கருத்துக்கள் பல எடுத்தாளப்பட்டிருப்பதை வாசகர்கள் அவதானிக்கலாம். எனவே, இச்சூக்தத்தில் உள்ள மந்திரங்கள் ஏழையும் ஒன்றன் பின் ஒன்றாக இனி அவதானிப்போமாக.

**சதசத்வாதம்**

இந்த வாதத்தின்படி பிரபஞ்சம் சத்தாகும். அதனுடைய முதற்காரணம் அசத் ஆகும். இருக்கு வேதத்தின் 10.72 இல் பிரபஞ்சத்தின் கால அளவு இரண்டு பகுதியாகக் கூறப்பட்டுள்ளது. (1) பூர்விக யுகம், (2)உத்தர யுகம். தேவர்களின் ஆயுட்காலம் பூர்விக யுகமாம். அதனைத் தொடர்ந்தது உத்தரயுகமாம். பூர்விகயுகம் அசத் என்றும் உத்தரயுகம் சத் என்றும் கொள்ளப்படும். இவை இரண்டும் ஒரு தொடர்புள்ள முன்னுரிமையோடு இருக்கின்றன. அத்துடன் அசத்து, சத்தினது உறவு உடையதாகச் சொல்லப்படுகிறது. இதனை இருக்கு வேதத்தின் 129.4இல் காணலாம். ஆனால் இருக்கு வேதத்தின் வேறு இடங்களில் அசத், சத் என்ற இரண்டும் மிக உயர்ந்த ஆரம்ப நிலை இறைவனின் இருப்பிடமாகும். அத்துடன் அதில் இருந்து அதிதி என்னும் பிரபஞ்ச இயற்கையும், அவனின் மகனான தக்ஷ னும் பிறந்தனர். இயற்கையின் மகன் என்று கூறப்படுவது பிரபஞ்ச யக்ஞத்தின் தலைமை வகிக்கும் அறிஞன் ஆகும். மிகத் தெளிவான விளக்கம் சதபதப் பிராமணத்தில் காணப்படுகிறது. அங்கு அசத் ரிஷி உருவாக்கமாகக் கொள்ளப்படுகிறது. அது பிராண சிருஷ்டியாக மேலும் விளக்கப்படுகிறது. அதுவே பிரக்ஞை பற்றிய தத்துவமாகும். அதுவே பிரபஞ்சத்தின் ஆரம்பத்திலுள்ள பிரதான சாராம்சமாகும் (ச.பி.6.1.1.1.)

ஒட்டுமொத்த சடத்தோற்றம் சத் ஆகக் கூறப்படுகிறது. அத்துடன் அதற்கு முந்திய கட்டம் பிராணனது ஆகும். அல்லது சக்தி அசத் என்ற கலைச்சொல் ஆகும். பிரமனை அசத் என்றும், பிரதானம் அல்லது பிரகிருதி சத் என்றும் கூறுவது பெறுமதி வாய்ந்த ஒரு விடயமாக அமையும். பராத்பர ஸ்வயம்பு என்று உளதாம் பொருளைக் குறித்து சத் அல்லது அசத்தை இங்கு முனிவர்கள் உறுதிப்படுத்துவதை நிராகரிக்கின்றனர். இனி, அடுத்ததாக ரஜோவாதத்தை அவதானிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சின்னத்தங்க நற்சிந்தனை

"சீரான அடியரொடு கூடு - சிவசிவா
செல்லப்பன் தந்த மந்திரம் நாடு "- நற்சிந்தனை

யோகசுவாமிகளது சீரிய அடியார்களைச் சந்திப்பதும், அவர்களுடன் கூடி நற்சிந்தனை நல்லமுதம் அருந்துவதும் நலம் மிகுந்த அனுபவமாகும். சுவாமிகளது நல்லடியார் ஒருவர் கொழும்பு நாரஹேன்பிட்டிய தொடர் மாடியிலிருந்த வீடொன்றில் வாழ்ந்தார். அவர் பெற்றோரின் கையைப் பிடித்துக்கொண்டு செல்லும் பிள்ளைப் பருவத்திலிருந்து சுவாமிகளைத் தரிசித்து வந்தவர். அவரை அவரது முதுமைப் பருவத்தில் நான் சந்தித்தேன். அப்பொழுது அவர் தமது உறங்கும் மெத்தையையே இருக்கும் ஆசனமாகவும் கொண்டிருந்தார். அவரது மெத்தை வெண்ணிற விரிப்பினால் இலங்கியது. அவர் தூய வெண்ணிற வேட்டி உடுத்திருந்தார். நீறிலங்கும் நெற்றியும் லெட்சுமிகரமான முகமுமாய் விளங்கினார். அவரது தலைமாட்டில் நற்சிந்தனை நூல் இருந்தது. அவர் என்னை முகமலர்ச்சியுடன் வரவேற்று முதலில் சில உருத்திராக்க மாலைகளைத் தந்தார். சிவதொண்டன் நிலையத்தியான மண்டபத்தில்வீற்றிருக்கும் திருவடிக்கு ஒரு உருத்திராக்க மாலையைச் சாத்துமாறும், மற்றையவற்றைத் தக்கவர்களுக்குக் கொடுக்குமாறும் கூறினார். 'பொரளையில் ஒரு வீதி அருகில் இரு உருத்திராக்க மரங்கள் இருப்பதாகவும், அவற்றிலிருந்து வீழும் நீலநிறமான பழங்களை ஒருவரும் கவனிப்பதில்லையென்றும் , கரையில் ஒதுங்கிக் கிடக்கும் மணிகளைப் பழக்கமான ஒருவர் மூலம் பொறுக்கி எடுத்துத் திறமையாகத் தொடுக்கக்கூடிய ஒருவரிடம் கொடுத்து மாலையாக்கியதாகவும் கூறினார்.

பின்னர், நற்சிந்தனையிலேயுள்ள 'அவனன்றி ஓரணுவும் அசையாது' எனும் சின்னத்தங்கப் பாடலைப் பாடத் தொடங்கினார். அப்பாடல் பற்றி என்னுடன் கதைப்பதற்குப் பெரிதும் விரும்பினார் எனத் தெரிந்தது. அவ்விருப்பத்திற்கேற்ப எனது கதைகளும் அமைந்தன போலும். இருவரும் உற்சாகமாக உரையாடி மகிழ்ந்தோம். அவருக்கு நற்சிந்தனைப் பாக்கள் பல மனனமாயிருந்தன. அவற்றை அவர் நன்கு விளங்கியிருந்தார். அவற்றைத் தியான மந்திரங்களாகக் கொண்டு தியான நிலையிலிருந்து உணர்ந்திருந்தார் எனவும் தெரிந்தது. அப்பாடலின் பெரும்பகுதி தம் வாழ்க்கையை வளப்படுத்தியிருப்பதை அவ்வப்போது கூறினார். அப்பாடலிலுள்ள உயர் நிலையை அனுபவிப்பதற்கு ஏங்குவதாகவும் சுவாமிகளின் அருள் அதற்குத் துணை செய்யும் என நம்புவதாகவும் கூறினார். எங்களது உரையாடலில் அவர் சொல்லியவற்றை எழுதுவதற்கு உளம் விரும்புகிறது.

**அவனன்றி ஓரணுவும் அசையாது**

அவனன்றி ஓரணுவும் அசையாதெனும் பெரிய
சிவனடியார் தமைக்கண்டு - சின்னத்தங்கம்
சிவனென்று வணங்கிட்டி
அங்கிங்கெனாதபடி ஆனந்தமாய்க் கூத்தாடும்
சங்கரனை நீ வணங்கி- சின்னத்தங்கம்
சந்தேகம் தீர்த்திடடி.
அத்துவிதப் பொருளை அறிவுக்கறிவானதொன்றைச்
சித்தத்திலே நீ வைத்துச் - சின்னத்தங்கம்
சிந்தை தெளிந்திடடி.
அருவாய் உருவாகி அம்பலத்தே கூத்தாடும்
குருபரனை நீ வாழ்த்திச் - சின்னத்தங்கம்
கும்பிட்டுக் கொண்டாடிடுவாய்.

இந்த நான்கு செய்யுட்களையும் பாடிவிட்டுத் "சீகாழித்துரையே! வாதவூர்த்தேவே! சிற்சபேசனே! சிவயோக சாமி" என்று கைகூப்பினார். அவரின் பார்வை சென்ற பக்கம் நான் திரும்பிப் பார்த்தேன். சுவரில் ஒரு சுவாமி கொலு இலங்கியது. நால்வர், நடராசர், கட்டிலில் அமர்ந்த வண்ணம் அருள்கனிய நோக்கும் யோகசுவாமிகளின் படம் என்பன பூமாலை புனையப் பெற்றனவாய் பொலிந்து தோன்றின. இந்த அடியார்கள் இல்லாவிட்டால் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற அருமைத் திருவாக்கை நாம் எப்படி அறிவது? அவர்களது வாழ்வும் வாக்கு எல்லாமும் சிவன் செயல் என்று நாம் வாழ வழிப்படுத்துகின்றன. நடராச வள்ளல் கோயில்களில் திருமூர்த்தமாக எழுந்தருளியிருப்பதுடன் அங்கும் இங்கும் எங்கும் திருக்கூத்து நிகழ்த்துகின்றார். அவரை வணங்கி அவர் செயலே யாவும் என்றும் அவன் செய்தான் இவன் செய்தான் என்று சொல்வதெல்லாம் வீண் என்றும் சந்தேகம் தீர்க்கிறோம். அவர் நமது இதய வெளியிலும் நின்று ஆடுகிறார். நமது அறிவுக்கு அறிவாய் நின்று நம்மை ஆட்டுவிக்கிறார். அவர் ஆட்டுவிக்க நாம் ஆடுகிறோம். இதனைத் தியானவேளையில் நன்கு உணர்கிறோம். ஆவதும் அழிவதும் எல்லாம் ஆடல்வல்லானின் செயலே என்றும் தெளிவு பெறுகிறோம். சிவனடியார்கள் 'அவனன்றி அணுவும் அசையாது' எனும் அறிவை நமது மனத்தில் விதைக்கிறார்கள். ஆடல்வல்லான் ஐயம் தீர்த்து அதனை வளர்க்கிறார். அத்துவிதவஸ்து அவ்வறிவைத் தெள்ளித் தெளிந்தெடுக்கிறது. கண்கண்ட தெய்வமான குருபரனே அவ்வறிவை உறுதியுடையதாக்குகின்றார். எனது பெற்றோர் நான் கர்ப்பத்தில் இருக்கும்போதே சுவாமிகளை வணங்கியதாகக் கூறுவர். நான் அதனை நம்புகிறேன். எனது பிள்ளைகளும் அப்படியே சுவாமிகளை வணங்கினர். சுவாமிகள் எனது பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டினார். இப்பிள்ளைகளில் ஒருவர் விமானியாக இருக்கின்றார். 'சிவதொண்டன்' எனும் மகன் என்னோடு வீட்டில் இருக்கின்றார். இருவரிலும் குருபரனே ஆடல் புரிகிறார். எங்கள் யோககுரு நாம் காணும் மனித உருவினர் மட்டுமல்லர். அவர் பரம்பொருளும் ஆவார். அதனால்தான் அவரைக் குருபரன் என்கிறோம். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருளின் அசைவே அனைத்தும் என்பதை குருவடிவில் நின்று திடப்படுத்தி அருள்கின்றார்.

**அகம்பிரம்மாஸ்மி**

அகம் பிரமாஸ்மியென்னும் அரியதிரு மந்திரத்தை
அகத்திலே நீ செபித்துச் - சின்னத்தங்கம்
ஆறுதலாய் இருந்திடடி

அந்தியுஞ் சந்தியும் நீ ஆசானைச் சிந்தித்து
வந்தனை செய்திருந்திடுவாய் - சின்னத்தங்கம்
மதியி ரவியுள்ள மட்டும்

யோகசுவாமிகள் முதலில் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதில் உறுதியுறச் செய்தார். உறுதியுற்ற பின் அவரே நான் என்று தினமும் தியானஞ் செய்யுமாறு வழிப்படுத்தினார். நான் விடியற்போதில் துயிலெழுவேன். பிள்ளைகள் ஏற்பாடு செய்த கையாள் எனைக் குளியலறைக்குக் கூட்டிச் செல்வர். நான் கைகால் முகம் கழுவி உடை மாற்றிய பின் கட்டிலில் வந்தமர்வேன். திருநீறு சாத்திச் சுவாமியைப் பார்ப்பேன். சுவாமியின் அருள்கனியும் பார்வை என்னை விழுங்கிக் கொள்ளும். அவர் எனது ஆசான். அவர் பரமசிவத்தால் திருவேறியிருப்பவர். என்னை உருவேற்றிக் கொண்டிருப்பவர். நான் என்னை மறந்து விடுவேன். என்னில் சுவாமிகளே விளங்குவார். சுவாமிகள் என்னைச் சும்மா இருக்கும் சுகநிலையிலே சும்மா இருக்கச் செய்வார். நான் "அவனே நானென்று" ஆறுதலாயிருப்பேன். இவ்வாறு அவர் சொல்லும்போது சிவதொண்டன் நிலையத்துப் பள்ளியறையே எனக்கு நினைவு வந்தது. பள்ளியறை மூலையில் மூவுருளிக் கதிரை இருப்பது போலவே அவரது கட்டிலின் கால்மாட்டுப் பக்கத்திலும் ஒரு மூவுருளிக் கதிரையிருந்தது.

**முழுதும் உண்மை**

ஆவதுமில்லையடி அழிவது மில்லையடி
தேவருமில்லையடி - சின்னத்தங்கம்
சிவனே முழுதும் உண்மை.

இப்பாடலை அவர் படித்த போது இப்பாடல் எனக்கும் மனனமாயிருந்தது. 'அகம்பிரம்மாஸ்மி' என்ற அனுபவத்தை ஆசான் ஊட்டிவிட்டார். இனி முழுதும் உண்மை என்ற மகாவாக்கியப் பொருளை உணர்த்தவிருக்கிறார் என எண்ணினேன். அவர் சொல்வதைக் கேட்க ஆவலாயிருந்தது. அவர் சொல்லலானார். தியான வேளையில் "எனக்கு ஒன்றும் தெரிவதில்லை." கண்ணைத் திறந்ததும் கதவு, யன்னல், சாமி படம், கட்டில் என்று ஒவ்வொன்றாக ஞாபகப்படுத்தச் சில கணங்கள் செல்லும். பின்னர் தொலைக்காட்சியிலிருந்து கூறுவன கேட்கும். செய்திகள், பிறந்தநாள் வாழ்த்து, மரண அறிவித்தல் எல்லாம் ஒலிக்கும். ஒரு நாள் வானொலியில் சோக இசை ஒலித்தது. 'இந்திராகாந்தி மரணமடைந்த செய்தி' வாசிக்கப்பட்டது. அரசியல் தலைவர்கள் பலரது அனுதாபச் செய்திகள் கூறப்பட்டன. 'ஈடுசெய்ய முடியாத இழப்பு' என்பது அடிக்கடி கேட்டது. இப்பொழுது யோசித்துப் பாருங்கள்; அது ஈடுசெய்யப்படாததொன்றா? அப்பொழுதும் எனக்கு இது பற்றி ஒரு சலனமும் ஏற்பட்டதில்லை. இங்கு ஒன்றும் ஆவதுமில்லை. அழிவதுமில்லை. இந்த மண்ணுலகுக்கு அப்பாலும் ஒன்றுமில்லை. இவற்றைக் காக்கும் கடவுள், படைக்கும் கடவுள், அழிக்கும் கடவுள், அட்டதிக்குப் பாலகர்கள் என்று ஒருவரும் இல்லை. திருவருள் வாசம் பரமசிவம் ஒன்றே உளது. அவரின் வார்த்தைகளைக் கேட்டு வியந்த வண்ணமிருந்தேன். வியந்திருந்த நான் ஆர்வ மிகுதியால் மீதிச் செய்யுள் இரண்டையும் பாடலானேன்.

**ஆன்மா அப்படியேயுள்ளது**

ஆசையை விட்டிடடி அதுவே சிவபூசையடி
காசைக் கருத்தில் வைத்து - சின்னத்தங்கம்
கவலை நீ கொள்ளாதே.

ஆன்மாவுக் கயலில்லை அப்படியே யுள்ளதடி
வீண்வாதம் விட்டிடடி - சின்னத்தங்கம்
வேண்டிப் பணிந்திடடி

பாடியதைக் கேட்டுவிட்டு அவர் சொல்லலானார். "எனக்கு ஒரு தேவையுமில்லை ; காசைப் பற்றிய கவலையுமில்லை. சுவாமி எல்லா ஏற்பாட்டையும் செய்து வைத்திருக்கிறார். பிள்ளைகள் வேண்டியவற்றை வேண்டும் போது செய்கின்றனர். ஆனால் தொண்டரைப் பற்றிய கவலையுள்ளது. அவரைப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது. எமக்குப் பின் அவர் நிலை எப்படியாகுமோ என்ற எண்ணம் அடிக்கடி ஏற்படுகிறது. ஆனாலும் என்ன, விமானியின் அறிவுக்கு அறிவாயிருந்து அவரை இயக்கும் பரமாத்மாவே தொண்டரிடத்தும் உளது. விமானிக்கு வேண்டியளவு ஊட்டும் அறிவு போலவே தொண்டர்க்கு வேண்டுவதையும் ஊட்டிக் கொண்டிருக்கிறார். விமானியும் தொண்டரும் சின்னத் தங்கங்கள். அத்தங்கங்களுக்கு ஆதாரமான பத்தரைமாற்றுத் தங்கம் பரமாத்மா, அந்தப் பரமாத்மா தான் என்னுள்ளும் என் பிள்ளைகளுள்ளும் மற்றும் எல்லாருள்ளும் எல்லாக் காலத்தும் உள்ளார். அவருக்கு அயலாக என்றும் எதுவும் இல்லை. ஆதலால் வீணான எண்ணங்களை விட்டு விட்டு இருந்த இருப்பிலேயே இருக்குமாறு உணர்த்துகிறார். அது அப்படியே உள்ளது காண் ஆரறிவார் என அறிவுறுத்துகிறார். அந்த நல்லறிவு அப்படியே இருக்க வேண்டுமெனப் பிரார்த்தனை செய்தபடி இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்த அவர் சலனமற்ற உபசாந்தராய் இருப்பதை உணர்ந்தேன்." இந்தச் சின்னத்தங்கப் பாட்டை சுவாமிகள் சிவதொண்டராக முயலும் அனைவருக்குமே பாடினராதல் வேண்டும். அப்பாடல் நான் சந்தித்த சின்னத்தங்கமாகிய சீவான்மாவை பரமாத்மாவாயிருக்கும் தங்கமாக ஆக்கி வைக்கும் அருள் சுரந்து கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது.சீரடியாருடன் உரையாடி மகிழ்ந்த பின் சின்னத்தங்கப்பாடல் நன்கு பிரகாசிக்கலாயிற்று. சிவயோககுரு சின்னத்தங்கமாகிய சீவனைப்பத்தரைமாற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கப்பாளமான பரமான்மாவாகவிருக்கும் பாங்கினைக் காட்டும் படிமுறை நன்கு விளக்கமாகியது. அப்படிமுறை மேல்வருமாறு:

**1. அவனன்றி அணுவும் அசையாது என்ற திவ்ய வாக்கும் சிவனடியார் வணக்கமும்**

அவனன்றி அணுவும் அசையாதென்ற வாசகம் நம்மவர் பலருக்கும் வாய்ப்பாடமானதொன்றே. ஆயினும் அது நமக்கு மனனமாவதில்லை. அதாவது நமது மனதில் பதிவதில்லை. அவ்வாசகத்தை அனுபவபூர்வமாயுணர்ந்த சிவனடியார் வணக்கம் அது நமது மனதில் பதிவதற்கு அநுகூலமாகும். என் செயலாவது யாதொன்றுமில்லை. எல்லாம் நின்செயலென்று உணரப்பெற்றேன் என்ற பட்டினத்தடிகள் வாக்கையும் அவர் வாழ்வையும் அறிந்து அவர் வழிப்படுவது நமது மனதிற் பதிவதற்கு உதவியாகும்.

**2. அம்பலத்தாடி வணக்கமும் சந்தேகம் தீர்தலும்**

சிவனடியார் வணக்கத்தால் எல்லாம் சிவன் செயல் என்ற அறிவு மனதில் பதிந்தபோதிலும் அவ்வறிவிற் சந்தேகமும் கலந்தே இருக்கும். நடராச வள்ளலை வழிபடுவதால் அச்சந்தேகம் மெல்ல மெல்ல நீங்கும். அவரே படைக்கிறார் காக்கிறார் அழிக்கிறார் என்று அவரருளால் உணரும்போது அச்சந்தேகம் நீங்குகிறது.

**3.அத்துவிதப்பொருளைத் தியானித்தலும் சிந்தை தெளிதலும்**

சங்கரனைவணங்கிச்சந்தேகம்தீர்ந்தபோதும்சொந்த அனுபவத்தில் உரைத்துச் சரிகண்ட போதே சிந்தை தெளியும் அதற்குத் தன்னுடன் அத்துவிதமாயிருக்கும் சிவத்தைச் சித்தத்துள் வைத்து தியானித்தலே சிறந்த முறை. நமது உயிருக்கு உயிராயிருக்கும் கடவுளின் அசைவே நமது அசைவு என்பதை சிவத்தியானத்தால் உணரும்போது சிந்தைத்தெளிவு ஏற்படுகின்றது.

**4. குருபரன் வணக்கமும் எல்லாம் அவன் செயல் என்ற தெளிந்த அறிவின் ஆனந்தக் களிப்பும்**

சிவபெருமான் குருவாக நடமாடி எல்லாம் என் செயலே என்பதை உணர்த்த உணரும் போது அது நமது சொந்த அனுபவமாகிறது. சீரடியார் சிவயோககுருவின் அருளாலேயே தமது வல்லாளனான விமானிப் புதல்வனையும் வலது குறைந்த புதல்வனையும் ஒன்றாகவே கண்டு இன்புற்றிருந்தார்.

**5. அகம் பிரமாஸ்மித் தியானம்**

அவனன்றி அணுவும் அசையாது என்னும் சிவவாக்கியம் மனனமாகிச் சந்தேகம் தீர்ந்து, சிந்தை தெளிந்து, ஆனந்த பரவசம் ஏற்படும் போதில் பொற்பணியாயிருந்த சீவன் தான் பொன்னாயிருக்கும் உண்மையை உணரத் தொடங்குகிறது. எல்லாம் சிவன் செயல் எனில் யானும் சிவன் செயல் தானே, சிவன் செயலான நான் சிவனினின்றும் வேறலன் அல்லவா? வேறலாத நான் சிவனேயாவேன் என்னும் வெளிச்சம் சீவனுக்கு ஏற்படுகின்றது. அப்போது யோககுரு சொல்கிறார், "அகம்பிரம்மாஸ்மி என அகத்திலே செபித்து ஆறுதலாயிரு" சின்னத்தங்கம் கட்டித்தங்கமாயிருக்கும் தன் உண்மையைத் தியானிக்கத் தொடங்கியது.

**6. ஆசானைத் தியானித்து உணரும் சிவோகம் பாவனை**

அகம் பிரமாஸ்மித் தியானமானது, மூச்சுள்ள போதெல்லாம் இடையறாதிருத்தற் பொருட்டு ஆசானைத் சிந்தித்து வந்தனை செய்திருக்குமாறு சுவாமிகள் வழிப்படுத்துகின்றார். 'ஆசான்' எனும் பதத்தால் குறிப்பிடப்படும் குரு பிரம்மத்தால் அதிட்டிக்கப்பட்டு உருவேறியிருப்பவரேயாவர். ஆகவே அவர் 'அகம்பிரமம்' என்பதை உணர்த்திக் கொண்டிருக்கிறார். ஆதலால் ஆசான் தியானம் சிவம் அகம் சிவோகம் என்று சீவனை சிந்திக்க வைக்கிறது. மூச்சு உட்சுவாசமாகும்போதும் நிச்சுவாசமாகும் போதும் சிவம் என்றும், அகம் என்றும் உணர்கிறது. (மதி, இரவி என்பன இடைகலை, பிங்கலை எனும் இரண்டின் வழியாகச் செய்யப்படும் உட்சுவாச நிச்சுவாசங்களைக் குறிக்கிறது.)

**7. சிவனே முழுதும் உண்மை**

சிவோகம் பாவனையால் தன்னைச் சிவனென உணர்ந்து கொண்ட சின்னத்தங்கத்துக்குச் சுவாமிகள் நீ பரமாத்மா என்ற உண்மை நிலையைக் காட்டுகிறார். நீ சிவமாயிருப்பது போல முழுவதும் சிவமாயுள்ளன. இங்கு ஒரு சீவனும் ஆகவும் இல்லை. ஒரு சீவனும் அழியவும் இல்லை. நீ ஒரு விசேடித்த காதணியாக இருந்தாலும் இன்னொன்று பொன்னாயிருந்தாலும் இப்படியே சிறப்பியல்புடைய பொன்னாபரணம் முழுவதும் ஒரு கட்டித்தங்கமே. இதனை உணர்ந்து கொண்டால் இங்கு மனிதரும் இல்லை. தேவரும் இல்லை. யாவரும் சிவமே... முழுதும் உண்மைப் பொருளான சிவம் ஒன்றே. இவ்வண்ணம் சீவனெல்லாம் சிவனே.முழுதும் உண்மை என உணர்த்தி சீவாத்மாவைப் பரமாத்மா என்ற உண்மை நிலையில் சுவாமிகள் இருத்தி வைக்கிறார்.

**8.ஆத்ம அனுபவத்தில் நிலைபெறச் செய்யும் சிவபூசையும், இவ்வனுபவத்தில் சலனமுறாதிருத்தற்கான ஆசையை நீக்குதலும்**

ஆன்மா என்றும் இருந்தபடியே இருப்பது. அதற்கு சலனமில்லை. மண், பெண், பொன் ஆகிய ஆசைகளே இஸ்திரமாக இருக்கும் நிலைக்கு இடையூறாவன. அதனால் அவற்றை விட்டிருத்தல் ஒன்றே சின்னத்தங்கம் செய்ய வேண்டியது. இவ்வாறு ஆசையை விட்டுவிட்டால் கட்டித்தங்கமாயிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையுணர்ந்த சின்னத்தங்கம் செய்வதெல்லாம் சிவபூசையாகிவிடும்.

**9. ஆத்மாவுக்கு அழிவில்லை**

சுவாமிகள் சின்னத்தங்கத்தை ஆத்மத் தங்கமாயிருக்கும் உண்மையுணர்த்தி அதன் ஆசைக் களங்கத்தைப் போக்கிய பின் அதன் பூரணத் தன்மையை உணர்த்துகிறார். அந்த பூரணத் தன்மைக்கு அயலாக யாதொன்றுமில்லை. மேலும் எவ்வித மாற்றமும் அதற்கேற்படுவதுமில்லை. அது அப்படியேயுள்ள காரியம். வீண்வாத தர்க்கங்களில் ஈடுபடாது இருந்தபடியே இருந்து வாழ்வதற்கான ஆசி கூறுவதாக இறுதிப்பாடல் அமைகிறது.

சுவாமிகளது சின்னத்தங்கப் பாடல்களாயினும் சரி. தங்கப் பாடல்களாயினும் சரி, சிறிய பாடல்களாயினும் சரி, நெடிய பாடல்களாயினும் சரி, வசனமாயினும் சரி, சாதனை செய்யும் சத்துக்களை சச்சிதானந்த நிலையிலே இருக்கச் செய்யவல்லனவாகவே உள்ளன. இதனை உணர்ந்து வாழும் பாக்கியத்தைச் சுவாமி அருள்வாராக.

# கற்றவர் விழுங்கும் கருணையாளன்

"கற்றவர் விழுங்குங் கருணையாளன்
மற்றவர் அறியாமாணிக்கமாமலை
சிற்றறிவுடையார் தேறாச் செல்வன்
நற்றவர் வணங்கும் நல்லூரானே"

-நற்சிந்தனை-

யோகசுவாமிகள் தமது குருநாதராகிய செல்லப்பா சுவாமிகளைப் போற்றிப் பாடிய துதிப்பாடலொன்றில் இடம்பெறுவது இப்பாமலர். இப்பாமலரிலே சுவாமிகள் தமது குருவைக் கற்றவர் விழுங்கும் கருணையாளன் என்றும் நற்றவர் வணங்கும் நல்லூரான் என்றும் கூறியிருக்கிறார். சுவாமிகள் தமது குருவுக்குக் கூறிய இத்திருவுடைமொழிகள் சுவாமிகளுக்கும் முழுவதும் பொருந்துவதாகும்.

சுவாமிகள் கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியாகத் திகழ்ந்தார் என்பதற்குச் சைவப் பெரியார் திருவிளங்கம் முதலாய பல நற்றவத்தோர்கள் சான்றாயிருந்தனர். திருவிளங்கம் அவர்கள் சிவஞானசித்தியார் முதலாய நூல்களுக்குச் சிறந்த உரையெழுதியவர், கல்வியிற் பெரியவராயிருந்ததுடன் தவத்திலும் சிறந்தோராய்த் திகழ்ந்தார். சுவாமிகள் திருவிளங்கம் அவர்கள் தெளிவாவதற்கு எண்ணி வந்த சித்தியார் பகுதிகளுக்குத் தெளிவளித்ததுடன், அவரது சோதிசொரூபனாகும் எண்ணத்தையும் அருளினார். இப்பெரியார் போன்று கல்வியிலும் தவவாழ்விலும் சிறந்து விளங்கிய இன்னுமொரு பெரியார் 'திக்கம் செல்லையா' என வழங்கும் ஈசானசிவன். அவரே சீகாழிச் சிற்றம்பலநாடிகள் அருளிய 'துகளறுபோதம்' எனும் நூலுக்குச் சிந்தாந்தபரமான சிறந்த உரை எழுதியதுடன் சிவபூசாதுரந்தரராகவும் விளங்கினார். அவரது கந்தவனக் கடவைக் கோயிலுக்குச் சுவாமிகள் எழுந்தருளி "ஆடுமயிலே பணிந்தாடும் மயிலே" என்ற மயில் பாட்டைப் பாடியளித்ததுடன் தேசகாலம் யாவையும் மறந்திருக்கும் பெரும்பேற்றையும் அளித்தார்.

இப்படியே அந்நாட்களில் வாழ்ந்த நவாலியூர் சோமசுந்தரப் புலவர், பிரம்ம ஸ்ரீ கணேசையர் முதலிய புலமை நிறைந்த ஆசாரசீலர்களும் கலைப்புலவர் நவரத்தினம் ஆதியபுலமையாளர்களும் சுவாமிகளின் அணுக்கத் தொண்டர்களாக விளங்கினர். சுவாமிகளும் செல்லப்பரைப் போன்று சாதி சமயமெண்ணும் சங்கடத்திற்குள்ளாகாதவராதலின் பௌத்த, கிறிஸ்தவ, இசுலாமிய அன்பர்களும் சுவாமிகளின் அன்பர்களாயிருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் நீதிபதி அக்பர் அவர்கள். அக்பர் அவர்களுக்குச் சுவாமிகள் நல்லூர் மூலட்டானவராகக்காட்சியளித்தனர்.

இராமகிருஸ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி பிரேமாத்மானந்த ஜீ மகராஜ் சுவாமி, அசங்கானந்த ஜீ மகராஜ் மெய்ஞ்ஞான நூல்களைக் கற்றுத் தெளிந்த நற்றவத்தோர் சுவாமிகளைத் தரிசிப்பதைத் தமது பெரும் பேறாக எண்ணி இனிய கட்டுரைகளும் எழுதி வைத்தனர்.

யாழ்ப்பாணத்துப்புலமையாளரும் இராமகிருஸ்ணமடத்துச் செந்தண்மை பூண்ட செல்வர்களும் மாத்திரமன்றி கற்றறிந்த சீரான சிங்களச் செல்வர்களும் சுவாமிகளைத் தரிசித்ததைப் பெரும் பேறாகக் கொண்டு அதனை எழுதியும் வைத்திருக்கின்றனர். இலங்கை நாட்டுக்குமப்பால் இந்திய நாட்டினின்றும் வந்து சுவாமிகளைத் தரிசித்த பேராசிரியர் T.M.P மகாதேவன் ஆகியோரும் 'ஆகாசவாணியில்' சுவாமிகளின் புகழைக் கூறினர். மேற்கு நாட்டு மெய்ஞ்ஞானத் தேட்டமுடையோரும் சுவாமிகளைத் தரிசிப்பதைத் தமக்கு வாய்த்த ஆசீர்வாதமாகக் கொண்டனர். ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்துத் தத்துவத்துறையிற் பயின்று முதுமாணிப் பட்டம் பெற்றவரும் 'குறுட்ஜீவ்' குழுவிற் சேர்ந்து மெய்யுணர்வு பெறப் பாடுபட்டவரும் சூபிஞானியர், பௌத்தஞானிகள் ஆகியோரின் நூல்களையும் உபநிடதங்களையும் நன்கு பயின்றவரும் கதிர்காமம், செல்வச்சந்நிதி ஆகிய திருத்தலங்களில் தவ வாழ்வு வாழ்ந்தவருமான சந்தசுவாமிகள் சுவாமிகளின் திருப்பாதங்களை வணங்கும் சிவதொண்டனாகச் சிவதொண்டன் நிலையத்திற் சேர்ந்து பணி செய்பவராகவும் திகழ்ந்தார்.

"கண்டார்க்கும் உண்டோகுறை- யோகனருள்
கொண்டார்க்கும் உண்டோகுறை"

-சிவசிந்தனை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்டிறந்து நில்

"சுட்டு இறந்து நில்" என்றான் எங்கள் குருநாதன் என்பது எங்கள் சுவாமிகளது திருமொழி. "நீயே நான் என்றுரைத்தான்" என்பதும் எங்கள் குருநாதன் திருப்பதிகத்திலுள்ள இன்னோர் மொழி. "நீயென நானென வேறில்லை", "நீயும் நானும் ஒன்றாச்சே", நீயே நானென்று நேர்நேராகச் சொன்னவனை" ஆகிய மொழிகளும் சுவாமிகள் அருளிச் செய்தவை. அவர் சிவதொண்டன் நிலையத்திற் சேர்வோர்க்கு அறிவுறுத்திய ஓர் உறுதிமொழி அவன் இவன் ஆர் என அறியீரோ" என்பது. இவையெல்லாம் "சுட்டிறந்து நில்" என்ற திருமொழியை மையமாகக் கொண்டவை.

### சுட்டு பிரிந்து நிற்பது

மனிதனை வெவ்வேறு ஆள்களாகச் சுட்டி அறியக்கூடிய அடையாளங்கள் பல உள்ளன. ஊர், பேர், ஆண், பெண், சாதி, சமயம் ஆகிய சில அடையாளங்களைக் குறிப்பிட்டுத் தேசிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது. தொழில் நிலை அடையாள அட்டை ஆகிய இன்னும் சிலவும் உள. இவ்வடையாள அட்டைகளில் குறிப்பிடப்படாத இன்னும் சில அம்சங்களும் உள. பெரியவன், சிறியவன், ஏழை, செல்வன், பண்டிதன், பாமரன், மடையன், ஞானி என்றெல்லாம் மக்கள் சுட்டிக் கூறப்படுகின்றனர். உடன் பிறந்தாரிடையேயும் இரட்டையரிடையேயும் கூடப் பிரித்தறியும் அம்சங்கள் உள. இவ்வண்ணம் கோடானுகோடி சனத் திரளில் ஒவ்வொருவரையும் பிரித்துக் காட்டும் வகையாக இச்சுட்டுக்கள் உள்ளன.

### பிணங்கி நிற்கும் சுட்டுக்கள்

சுட்டறிவுக்கு உட்பட்ட ஒவ்வோர் ஆளும் தன் ஆளுமையைப் பேண விழைகிறான். ஒவ்வொருவரும் நீருள் கிடக்கும் தக்கை மேலே வரும் இயல்பினது போல உயர உயர வளர்வதற்குப் பாடுபடுகின்றனர். இவ்வாறு பாடுபடும்போது ஒருவன் மற்றவனுடன் பிணங்குகிறான். சண்டையிடுகிறான். வல்லவன் மேலோங்குகிறான்; மாட்டாதவன் தாழ்கிறான். வல்லாளன் ஆட்சி செய்கிறான்; வலுவற்றவன் அடங்குகிறான். ஒருவன் அடிக்கிறான்; மற்றவன் அழுகின்றான். உடன் பிறந்தாரிற் கூட இப்பிணக்குகள் உள. ஒட்டிப் பிறந்த இரட்டையர் ஒன்றாய் எழுந்து ஒன்றாய்ப் படுக்க வேண்டியவர். அவர்கள் இணங்கி வாழும் வரை வாழ்ந்தனர். பிணங்கியபோது ஒருவன் முதலில் மாண்டான். மற்றையவன் சற்று நேரத்தில் மாண்டான். இவ்வாறான பிணக்குகளும் பிணக்கின் கேடும் தனித் தனிச் சுட்டுக்களுக்கும் ஊர், தேசம், சாதி, சமயம் எனப் பிரிந்திருக்கும் சமூகச் சுட்டுக்களுக்கு நேரிடுகின்றன.

ஐம்பூதத்தியற்கையான உலகில் நிலம் நிற்கிறது. காற்று அசைகிறது. நீர் குளிர்கிறது. தீ சுடுகின்றது. ஐம்பூதத்தியற்கையான உலகப் பொருட்கள் பலவும் பிரிந்து நிற்கின்றன. தாவரம் நிற்கிறது. பிராணிகள் இயங்குகின்றன. பிராணிகளில் சிங்கம் ஒரு பிரிவாக உளது. முயல் இன்னொரு பிரிவாக உளது. இவற்றினுள்ளும் ஒன்றுபோல் இன்னொன்றில்லை. உலகிலுள்ள யாவும் ஒன்றுடனொன்று இணங்கியும் பிணங்கியும் உள்ளன. பிணக்கினால் விளையும் கேடுகள் பல. ஆட்களிடையேயும் இப்பிரிவும் பிணக்கும் கேடும் இயல்பிலேயே உள்ளன.

### அவனி அனைத்தும் பொய்

உலகிற்கு இன்னொரு பெயர் அவனி. அவனி என்பதன் பொருள் அவமானது ; பொய்யானது. உலகிலுள்ள யாவும் தோன்றி நின்று ஒடுங்குகின்றன. புற்றீசல் தோன்றிய சில கணங்களில் மறைகிறது. பயிர்கள் சில ஆயிரங் காலத்தில் மறைகின்றன. ஊழிக் காலத்தில் யாவும் அழிகின்றன. உலகமும் அழிகின்றது. அழிவன எவ்வாறு உள்ளனவாகும்? இலது உளதாகாது.

### சுட்டும் பொய்

உலகியற்கையான பிரிந்து நிற்றலும் பிணங்கி நிற்பதுமான 'சுட்டு' பொய். சுட்டுணர்வுக்குட்பட்ட ஆள் பிறப்பிறப்புக்கு உட்படுகின்றான். 'வேத நூற்பிராயம் நூறு' என்கின்றனர். நூறாண்டு வாழ்ந்தாலும் முடிவில் மாண்டு போகின்றனர். நித்திய வாழ்வுடன் ஒப்பிடும் போது இவ்வாழ்வு நீர்க்குமிழி போன்றதெனவும் பெரியோர் சொல்கின்றனர். நீ நான் அவன் இவன் எனப் பிரிந்தும் பிணங்கியும் நிற்கும் சுட்டுக்களெல்லாம் பொய்யாய்ப் போகின்றன. பொன்னும் உடலைப் பொன் போற் போற்றியும் மாயாவிகார மனைமக்கள் உறவெனும் பேயாற் பிடிபட்டும் பிதற்றிய சுட்டுக்கள் எல்லாம் பொய்யாய் பழங்கதையாய்ப் போகின்றன. ஆளடையாள அட்டையில் ஒட்டப்பட்டிருக்கும் நிழற்படம் பொய்யாதல் போல அவ்வட்டையால் சுட்டப்படும் ஆளும் பொய்யே.

### சுட்டும் சூட்சியும்

பொய்யான சுட்டில் மெய்ப்பொருள் உளது. ஒவ்வொரு சுட்டிலும் மெய்ப்பொருள் சூட்சிப் பொருளாக உள்ளது. மனிதனின் தேகம், உணர்வு, உள்ளம், புத்தி, சித்தம் எல்லாம் பொய். இவையெல்லாம் மாற்றமுற்று அழியும். இவைக்கு ஆதாரமான உயிருக்கு உயிரான பொருள் ஒன்றுளது. அதுவே அம்மனிதக் கோலத்தை இயக்கும் சூட்சிப்பொருள். அது அழியா மெய்ப்பொருள். அதனை ஆத்மா என்றோ கடவுள் என்றோ சத்திய வஸ்து என்றோ இவ்வண்ணம் இன்னும் பல பெயர்களாலோ வழங்குவர். அது ஒரு நாமம் ஒருருவம் அற்ற யாதோ ஒரு வஸ்து. அது 'இன்னதன்மையது இது' என எவராலும் சுட்டிச் சொல்ல முடியாத சுட்டிறந்த பொருள். அந்தச் சூட்சிப் பொருள் ஒவ்வொன்றினுள்ளும் உளது. அதனையன்றி ஒரு பொருளும் இல்லை. அது ஒவ்வோர் உயிருக்கும் உயிராக உளது. உலகுக்கும் உயிராக உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூட்சிப் பொருள் பிரிவிலாதது**

சுட்டுக்கள் நீ, நான், அவன், இவன் என்று பலவாய்ப் பிரிந்து நிற்கின்றன. சூட்சிப்பொருள் ஒன்றாய்ப் பிரிவிலாது நிற்கின்றது. மக்கள், தேவர், நரகர் என்ற வேறுபாடின்றி அனைவரிலும் ஒன்றாய் ஒன்றி நிற்கின்றது. எங்கள் சுவாமிகள் கீதாசாரியனைத் தியானித்து வரும் அன்பர் ஒருவரிடம் தெரு நாயைச் சுட்டிக்காட்டிச் சொன்ன ஒரு வாசகம் "இந்தத் தெரு நாயிலும் கிருஸ்ணனிடத்தும் உள்ள பொருள் ஒன்றே. அது மடையன் ஞானி என்ற பேதமிலாது ஒன்றி நிற்கின்றது. கள்வன், கொலைகாரன், குடிகாரன், மாமிசமுண்போன், பால்பழம் அருந்துவோன் அனைவரிலும் பின்னமில்லாது ஒன்றாகவே நிற்கின்றது. நீரில் தண்மை வைத்ததும் தீயில் வெம்மை வைத்ததுமான பராசக்தி ஒன்றாகவே உள்ளது. சூட்சிப்பொருள் மாலையில் நூல் போன்றுள்ளது. சுட்டுப்பொருள்கள் பல நிறமணிகளை ஒத்துள்ளன. அம்மணிகளையெல்லாம் இணைத்துக் கொண்டு நூல் இருப்பது போலச் சூட்சிப்பொருள் அனைத்தையும் இணைத்துக்கொண்டு ஒன்றாயுள்ளது.

**சூட்சிப்பொருள் பிணக்கிலாதது**

சுட்டுப்பொருட்கள் ஒன்றோடொன்று பிணங்குகின்றன. சூட்சிப்பொருள் பிணக்கிலாதது. அது நீ நான் என்று சண்டை போடுவதில்லை. எனது ஊர் உனது ஊர் என்று பிணங்குவதில்லை. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று இணக்கமாய் வாழ்வதற்கே தூண்டுகின்றது. அது சிங்களவர், தமிழர் என்று போரிடாது, யாவரும் சகோதரர் என்று இணங்கி வாழவே செய்யும்.

**சூட்சிப்பொருள் அன்பு விலாசமானது**

சூட்சிப்பொருள் அன்பே வடிவமானது. அது அனைத்திலும் அன்பைப் பெருக்குவது. அன்னை தன் குழந்தைகளிடத்து அன்பு சுரப்பது போன்று எல்லாரிடத்தும் எல்லாவற்றிலும் அன்பைப் பொழிகின்றது. அது கொல்லும் புலியிடத்தும் தன் குட்டி மீது அன்பு செலுத்தச் செய்கிறது. அற்புதமான முறையில் மான் குட்டிக்கும் அது பாலூட்டச் செய்யுமாறு அந்த அன்பு பெருகுகின்றது.

**சூட்சிப்பொருள் சும்மா இருப்பது**

சூட்சிப்பொருள் சுட்டுக்கள் அனைத்துமாயும் அனைத்துக்கும் ஆதாரமாயும் அனைத்துடனும் பிரிவிலாததாயும் பிணக்கியதாயும் நேயமாயும் இருப்பதுடன் ஈதொன்றுமில்லாத சுட்டிறந்த பொருளாயுமுளது. பூதங்களுக்கெல்லாம் பூதாகாயம் ஆதாரமாவது போலப் பூதாகாயத்துக்கும் ஆதாரமான பரவெளி உளது. அது நாதத்தத்துவத்துக்கும் அப்பாலான நாதாந்த வெளியாக உளது. அந்த நாதாந்த வெளியிலே சோதிமயமாய் ஒளிர்கின்றது. அது தன்னந்தனிப் பொருளாய் தானே தானாய்ச் சுடர்கின்றது. அந்தச் சிற்பர வெளியிலே நானில்லை, நீயில்லை, அவன் அவள் அது இல்லை, பூமியில்லை, வானமில்லை. அது யாதொன்றுமில்லாத ஏதோ பொருளாயுளது. அது உணர உணர்வுக்கெட்டாததாயுளது. அதனை ஆராய்ந்து அறிய முயன்ற உண்மை நூல்கள் அறியொணாது ஐயா என ஓலமிடுகின்றன. அந்த அறியொணாப் பொருளை அது எனும் பொருள்படும் 'தத்' எனும் பதத்தால் நூல்கள் வழங்கின. தத் பதம் 'அது' எனும் படர்க்கைச் சொல்லல்ல. 'அது' ஒரு குறியீட்டுச் சொல். அக்குறியீடு சுட்டிறந்த பொருளையே குறித்து நிற்கின்றது. அது யாதுமில்லாததாயிருப்பதுடன் ஒன்றுஞ் செய்யாது சும்மாயிருக்கிறது. அது அகண்ட மோனம் ;நன்மோன நிறைவு.

**தன்னையறிந்த சற்குரு**

இந்த அதனை அறிந்த அதுவாயிருக்கும் மகான்கள் என்றும் எங்கும் உள்ளனர். அவர்களுட் சிலர் தாம் அறிந்த உண்மையை அறிவை நாடுவோர்க்கு அறிவிக்கும் சற்குருவாயுள்ளனர். அவர்கள் தன்னை அறிந்த சற்குரவர் ஆவர். தன்னை அறிந்த சற்குரவர் தன்மை முன்னிலை படர்க்கையற்றவர்.

**அது நீ**

அதுவாய் இருக்கும் சற்குரு தன்னைச் சரணடைந்த அன்பனுக்கு 'அது நீ' என்ற மந்திரமொழியை அருளிச் செய்கிறார். அவர் ஆதியந்தமில்லாததும் சோதிமயமானதுமான சிற்பரவெளியை அன்பனுக்குக் காட்டியருளிய பின் அந்தச் சோதிமயமாக நிற்கும் பொருளே, நீயாகவும் உள்ளாய் என உபதேசஞ் செய்கிறார். அது உபநிடத முனிவர்களால் 'தத்துவம் அஸி' (அது நீயாக உள்ளாய்) என உபதேசிக்கப்பட்டது. அந்த உபதேச மகிமையால் சத்திய காமனான அன்பன் 'அகம் பிரமாஸ்மி' (நான் பிரமமாயுள்ளேன்) எனும் அநுபூதிக்கு ஆளாகின்றான். இந்த நீ, நான், அது என்பன முன்னிலை தன்மை படர்க்கைச் சுட்டுக்களல்ல. தன்மை முன்னிலை படர்க்கையற்ற சுட்டிறந்த வஸ்து.

**சுட்டிறந்து நிற்கும் யோககுரு**

யோககுரு சுட்டிறந்து நிற்கும் அநுபூதிச் செல்வர். அவர் தமது சற்குருவின் அருளால் இப்பெரும் பேற்றுக்கு ஆளானார். இதனை எங்கள் குருநாதன் திருப்பதிகத்தில் படிமுறையாகக் கூறியிருக்கின்றார். குருநாதன் முதலில் "தேகம் நீயல்ல" என்று கூறினார். தேகம் பொய்யை மெய்யெனக் கொள்ளும் மோகம் எனவும் அந்த மோகத்தை முனிந்து தள்ளு எனவும் அருளினார். அடுத்து "நீயே நான்" என்று யோகரை இடமாகக் கொண்டார். விண்ணும் மண்ணுமான செல்லப்ப தேசிகர் யோகரின் சித்தத்தில் தன்னை நிற்க வைத்தார். யோகரும் திக்குத் திகாந்தமெங்குமுள்ள நீ - நான், அவள் - அவன், மலை - நதி, மண் - விண் எல்லாவற்றையும் தன்னிலே கண்டு அனைத்திலும் அன்பு செய்து அனைத்திலும் தானாக நிற்பதை உணரலானார். அந்நிலையிலே "நித்தியன் நீ" என்று

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசகாரியம்

மெய்யுணர்வு எய்துதற்கண் நிகழும் உணர்வு மாற்றங்களைப் பத்து வகையில் வைத்துக் கூறும் முறை தசகாரியம் எனப்படும்.

**பொருள்களை அறியும் முறை :**

உயிர்களின் உணர்வு பொருள்களை முன்னர்ப் பொது வாக (பருவட்டாக) க் கண்டு, பின் அவற்றைச் சிறப்பாக நுணுகி உணர்ந்து உணர்ந்தோர் கண்டதைக் கொண்டு காணாததிற் செல்வது (From the Known to the Unknown) என்றும், படிமுறையால் அறிவு நுணுகி வருதல் என்றும் குறிப்பர். திருவள்ளுவர் அறிவின் இவ்வியல்பை ***"அறிதொறும் அறியாமை கண்டற்றால்"*** என உவமையாக வைத்துக் கூறுகிறார். இத்தொடரின் பொருளைப் பரிமேலழகர் பின்வருமாறு விவரிக்கிறார்: நூல்களாலும் நுண்ணுணர் வாலும் பொருள்களை அறிய அறிய முன்னை அறியாமை கண்டாற் போல அறிவிற்கு எல்லையின்மையின் மேன் மேல் அறிய அறிய முன்னை அறிவு அறியாமையாய் முடியுமாறு போல என வரும்.

**மூவகை ஞானம் :**

இனி, மெய்யுணர்ந்து வீடுபேறு எய்துவதே பிறவிப் பயன் என்பது தலையாய அறிவுடையார் எல்லார்க்கும் ஒத்த துணிபு. மெய் உணர்தல் என்பது கடவுள் எனக் கூறப்படும் மெய்ப்பொருளை ஒருவன் தன் உணர்வின்கண் விளங்கக் காண்பதே ஆம். அங்ஙனம் காணலுறும் நெறியின்கண் மூன்று படி நிலைகள் சித்தாந்த சைவத்தில் விளக்கப்படுகின்றன. அந்நிலைகளில் உயிரின்கண் விளங்கும் உணர்வு விளக்கங்களை முறையே பாசஞானம், பசுஞானம், பதிஞானம் எனப் பெயரிட்டு வழங்குவர்.

பிறப்பு நிலையில் உள்ள உயிர், உடம்பையும் உல கையும் பற்றிநின்று, உலகப் பொருள்களைத் தனித் தனிச் சுட்டி அறிந்து வரும் உணர்வு பாசஞானம் எனப்படும். தன் அறிவைக் கட்டுப்படுத்தும் பாசமாகிய தத்துவதாத்து விகங்களால் விளங்கித் தனக்கு வேறான பொருள்களைப் பற்றி நிகழும் ஞானம் அது.

மெய்ப்பொருளைத் தலைப்பட்டு உணர விரும்புவோன், முதற்கண் தன்னைப்பற்றி "நான் ஆர்?" என உள் நோக்கி உணர்தல்வேண்டும். அவ்வாறு உணரும்போது, தன்னைத் தூல உடம்பு, சூக்கும உடம்பு முதலியவற்றின் வேறாக இது நான் அல்லேன், இது நான் அல்லேன்" எனக் கழித்துச் செல்லும் ஆராய்ச்சி உணர்வு நிகழும். அங்ஙனம் கழித்து மேம்படும் உணர்வு தத்துவக் கட்டுப்பாட்டின் நீங்கி வியாபகமாய் விளங்கும். அந்நிலையில் அவ்வான்மா தான்மட்டும் மெய்ப்பொருள் முன் கண்டு வந்த பொருள் அனைத்தும், கனவிற்கண்ட பொருள் விழிப்பு நிலையில் மறைவது போல, மறைந்தொழிவன என உணரும், இது 'நான்முதல்', "அஹம்பிரஹ்மாஸ்மி" என நிற்பது ; இந்த அநுபவ உணர்வே முடிந்த மெய்யுணர்வு எனக் கொள்வாரும் உளர். அவர் இதற்கு ஏற்றபடி மெய்ந்நூல்களில் வரும் அநுபவ உரைகளுக்கு விளக்கம் கூறி மதம் அமைப்பர். ஆனால், சைவசித்தாந்த நெறிப்படி இது தலைநகரில் உள்ள அரச மாளிகையில் செல்ல விரும்புவோன் தலை நகரைச் சூழ்ந்துள்ள புறநகரை அடைந்தாற் போன்றது.

நானே முதற்பொருள் (அஹம்பிரஹ்மாஸ்மி) என்னும் உணர்வு நிலையில் நின்ற மாணக்கனைச் சைவ ஆசிரியர் பின்வருமாறு வினவி முதல்வனது அருளின் உண்மையை நினைப்பிக்கின்றார். :-

அன்றுமுதல் இன்றளவும் அண்ணல் அறி விப்பதன்றி
இன்(று) அறிவேன் நான் என்(று) இயம்புவதென்? - என்றும்
அவத்தை தனில் உணர்த்தி ஆங்(கு) அருத்தி இன்(று) இத்
தவத்தில் உணர்த்தினர் ஆர் தான்?

உன் அறிவை நீயே உணர்வையே ஆமாகில்
இந்நெடுநாள் பாசத்(து) இயையாயே-உன் அறிவை
நீங்கா அறிவாகி நீரும் இரதமும்போல்
ஆம்காண் அரனார் அருள்.

முதல்வன் அருள் இதுகாறும் மறைந்து நின்று உணர்த்தி வந்தது. இப்பொழுதும் தவங்காரணமாகச் சற்குரவனாக நின்று உணர்த்தியதால் தான் நீ உன்னை உணர்ந்தாய் ; நீ என்றும் முதல் ஆகாய் என்கிறார் ஆசிரியர்.

இங்ஙனம் ஞானாசிரியன் உணர்த்த விளக்கொளி உள்ளபோதே தன் உண்மை உணரப்படும் கண்ணொளி போல, தனக்குச் சார்பாகவுள்ள திருவருளால் தன் வியா பக நிலை உணரப்பட்டது எனக்கொண்டு திருவருள் உண்மையை உணர்வான் மாணவன். ஆயினும், அந் நிலையில் தனக்கு எல்லாச் செயலும் செய்தல் கூடும் என உணர்வன். இது முதல்வனோடு தன்னைச் சமம் எனக் கருதும் உணர்வு ஆதலால், சிவசம உணர்வு எனப்படும். இவ்வுணர்வும் மெய்யுணர்வாவதில்லை. பழுக்கக் காய்ச்சிய இரும்பு சுடும் போதும், சுடுதல் தீயின் செயலேயன்றி இரும்பின் செயலன்று. அதுபோல பாசத்தின் நீங்கிய ஆன்மாவிற்குக் கூடும் செயல்கள் முதல்வன் செயல்கள் அன்றி உயிரின் செயல்கள் அல்ல. இவ்வாறு இவ்வுணர்வு நிகழும்போது, ஆன்மா தன் செயலாவது ஒன்றும் இன்று என, நீர்வழிப்பட்ட புணை போல, முதல்வன் திருவருளில் அடங்கி அதன் வயப்பட்டு நிற்றல் வேண்டும்.

மேலே கூறிய உணர்வு நிலைகளில் நான் முதல் (அஹம்பிரஹ்ம) என நின்ற நிலையில் யான் என்னும் செருக்கும், முதல்வன் செயலோடு ஒத்தசெயல் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு என உணரும் நிலையில் (சிவசம உணர்வு) எனது என்னும் செருக்கும் இருத்தலின், இவ்விரு வகை உணர்வும் பசுஞானம் எனப்படும். "நான் ஆர்?" எனப் பொருள்களைச் சுட்டித் தனக்கு வேறாகக் கழித்துச் சென்ற அறிவு அவ்வாறு பாசப்பற்று அறினும் முன்பயின்றுவந்த பயிற்சி காரணமாக யான், எனது என்னும் செருக்காகிய பசுத்துவ வாதனை நீங்காமையால், நான் முதல் எனவும், எல்லாச் செயலும் எனக்கே கைகூடும் எனவும், மேற்கூறிய உணர்வு நிலைகள் உண்டாதலின், அவை பசுஞானம் எனப்பட்டன. பசுத்தன்மை முற்றும் நீங்காத நிலையில் விளங்கும் ஞானம் பசுஞானம்.

மேற்கூறியதிலிருந்து, பசுஞானம் ஒருவனுக்கு உளதாகும் பொழுது பாசஞானம் அறியாமையாய்க் கழிதல் விளங்கும். இப்பசுஞானம் அவ்வாறு நீங்குவதே ஆகும்.

திருவருளின் உண்மையினையும் அதுவே தனக்குச் சார்பாய் நின்று தன் அறிவிச்சை செயல்களை விளக்கிச் செலுத்தும் முதலாதலையும் உண்மையாக உணரும் உணர்வே பதிஞானம் அல்லது சிவஞானம் எனப்படும். தலைவனின் அருளைச் சார்தல் பற்றி விளங்கும் ஞானம் பதிஞானம். இதுவே "பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்" எனச் சேக்கிழார் அடிகளால் குறிப்பிடப் பெற்றது. இங்கு முதல்வன் திருவருள் ஆன்ம உணர்வின்கண் அளப்பரிய ஆகாயத்தை விளக்கி எழும் ஞாயிறே போன்று பேரொளி யாய் எழுவது. அதனை ஒளியாய் மட்டும் உணர்ந்து நில்லாமல், அதில் தன் முனைப்புச் சிறிதுமின்றி அடங்கி நிற்பார்க்கு அவ்வருளுக்கு முதலாகவுள்ள பரசிவம் இற வாத இன்ப அன்பாய் வெளிப்பட்டு ஆன்மாவைத் தன் னுள் அடக்கிக்கொண்டு தானே ஆகி நிற்கும். அன்பே இன்பமாய் அமரும் இந் நிலையே "யான் ஆகிய என்னை விழுங்கி வெறுந்தானாய் நிலை நின்றது தற்பரமே", "அறி வொன்றற நின்(று) அறிவார் அறிவில் -பிறிவொன்றற நின்றபிரான் அலையோ" என்றாற்போல வழிமொழியப் படும் பேசா அனுபூதிநிலை. இச் சிவஞானம் ஒருவன் உணர்வில் விளங்கும்போது, முன் விளங்கிய பசுஞானம் அறியாமையாய்க் கழியும். இங்ஙனம் அவன் அருளே கண்ணாகக்கண்டு, அவனருளால் அவன்தாள் வணங்கி, இருள்கடிந்து, உள்ளத்து எழுகிற ஞாயிறே போன்று நின்ற முதல்வன் தன்மையை நினைப்பற நினைந்து இன்புறும் உணர்வு நிலையாகிய சிவஞானம் முடிந்த உணர்வு நிலை ஆகும். இதனைக் கழிப்பிக்கும் உணர்வாய்ப் பிறிதோர் உணர்வு இல்லாமையால், இது "நன்னலம்பெற நிறைந்த ஞானம்", "சுதந்திர ஞானம்" எனச் சிறப்பித்துக் கூறப் படும்.

**பத்து நிலைகளாக வைத்து உணர்த்தல்:**

மேலே கூறிய முறையில் பாசஞானம் நீங்கிப் பசுஞானம் விளங்கப் பெறுதலையும், பின்னர் அதுவும் நீங்கச் சிவ ஞானம் விளங்கப் பெறுதலையும் பத்து வகையில் வைத்து விளங்க உணர்த்தும் முறை தசகாரியம் எனப்படும்.

ஆன்மா ஐம்பொறி, மனம் முதலிய தத்துவங்களோடு கூடி அவற்றின் செயலே தன் செயலாகக் கண்டுவரும் உணர்வு நிலையே பாசஞானநிலை எனப்பட்டதும், அதை நீக்கிக்கொள்ளுதற்கு முதற்கண் தத்துவங்களின் இயல்பைச் சுட்டி உணரவேண்டும். பின்வரும் உதாரணத்தைக் கவனிப்போம். ஒரு பொருளைக் கண்ணாற் காண்கிறோம். அப்பொழுது "நான் இதனைக் காண்கின்றேன்" என்னும் உணர்வு நிகழ்கிறது. இங்கே உயிர், கண்ணே தான் என உணர்ந்து நிற்கின்றது. கண் ஒரு பொருளின் உருவை மட்டும் காண உதவுகிறது ; மேலும், ஒரு பொருளைக் கண்ட பின், கண்ணை மூடிக்கொண்டு எண்ணும்போது அப்பொழுதும் உள்ளத்தில் அதன் உருவம் தோன்றும். அத்தோற்றம் கண்ணால் காணப்படுவது அன்று ; முன் கண்ணோடு ஒன்றி நின்று உணர்ந்த மனத்தால் நிகழ்வது அது. கண் முதலிய பொறிகளுள் ஒன்று அறியும் புலனை மற்றொன்று அறியாது, ஆனால் அவற்றின் வேறாக உள்ள மனம், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தையும் விருப்பு, வெறுப்பு, அன்பு முதலிய பிழம்பு அறியப்படாத பொருள்களையும் உணரும். இதனால் நாம் கண் முதலிய பொறிகளுக்கு வேறாய் இருந்தும், அவற்றோடு கூடிநின்று புலன்களை அறிந்து வருகிறோம் என்று உணரலாம். இவ்வாறு நமக்குப் பொருள் உணர்வைத் தோற்றுவிக்கும் கருவிகளை முப்பத்தாறு தத்துவங்களாக ஞான நூல்கள் வகுத்துக் கூறுகின்றன. அவற்றின் நீங்குதற்கு அத்தத்துவங்களால் நமக்கு விளங்கும் அறிவிச்சை செயல்களின் விருத்திகளை இன்ன இன்ன என முன்னர் உணர்தல் வேண்டும். அங்ஙனம் உணரும் உணர்வு **தத்துவரூபம்** எனப்படும். பின், அவை தாமே அறிவன அல்ல ; கண்ணுக்குக் காட்டும் கண்ணாடி போல உயிர்க்குக் காட்டும் அறிவில் பொருள்கள் என்று உணர்தல் வேண்டும் ; அங்ஙனம் உணர்தல் **தத்துவதரிசனம்** எனப்படும். அதன் பின்னே நமக்கு அன்றாடம் நிகழும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், தன்வசம் அழிதல் என்னும் நிலைகளில் வைத்து, அத்தத்துவங்கள் ஆன்மாவினின்று நீங்குவனவாயிருத்தலையும் சுட்டி உணர்தல் வேண்டும். இது **தத்துவ சுத்தி** எனப்படும். இங்கு உருவம், தரிசனம், சுத்தி என்னும் சொற்கள் பொதுவாகக் காணுதல், ஐயுறவோடு காணுதல், தெளியக் காணுதல் என்ற பொருளில் உள்ளன. தத்துவசுத்தி என்னும் பாசத்தைப் பற்றிய தெளிவுக்காட்சி எய்திய ஆன்மா, அக்காட்சி பற்றிப் பாசத்தின் நீங்குதலின், பாசஞானத்தின் நீங்கித் தன்வியாபக நிலை உணரப் பெற்றுத்தான் முதல் என நிற்கும். இங்ஙனம் தன்னை உணர்தலே ஆன்மாவின் இயல்பைப் பொதுப்படக்காண்டல். ஆதலால் இக் காட்சி **ஆன்ம ரூபம்** எனப்படும். மேலே கூறியபடி இவ்வுணர்வு நீங்குதற்குக் காரணமாய், ஞானாசிரியனால் நினைப்பிக்கப்படும் திருவருளின் உண்மையை உணரும் உணர்வு சிவரூபம் எனப்படும். ஆகாயத்தின் அளப்பருந்தன்மையைக் காணும்போது, அங்குக் காணப்படுவது வெறும் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி அவ்வெளியின் அளப்பருந்தன்மையைக் காட்டி நிற்கும் ஞாயிற்றின் ஒளியும் ஆகும். அவ்வொளி பற்றியே ஆகாயத்தின் பரப்பு உணரப்படுகின்றது. அதற்குச் சார்பாய் யாங்கணும் நிறைந்துள்ள திருவருள் ஒளி இருத்தல் பற்றியே எனத் திருவருளின் உண்மையைப் பொதுவாக உணர்வதே சிவரூபம் எனப்பட்டது. இச்சிவரூபம், ஆன்மரூபம் எனப்பட்ட பசு ஞானத்தை அறியாமையாய்க் கழிப்பித்துச் சிவசம உணர்வு தோன்றுவதற்கு முன்னிலையாகி நிற்கும். தான் முதல் அன்றெனினும், " எல்லாம் செய்தல் எனக்கே கைகூடும் " எனத் தன்னை உணர்தல் ஆன்ம தரிசனம் எனப் படும்.

முத்திநிலைக்கண் முத்தான்மாக்களிடமிருந்து நிகழும் அற்புதச் செயல் அனைத்தும் முதல்வன் செயலே அன்றிப் பிறிதில்லை ; அது மின்னாற்றல் ஒரு பொருளைப்பற்றி நின்று (Resistance wire) தன்னை விளக்குதல் போன்றது எனத் திருவருளின் ஆற்றலைச் செம்மையாக உணர்தல் எனப்படும். இவ்வுணர்வு எனது என்னும் செருக்காய் நின்ற ஆன்ம தரிசனம் எனப்பட்ட பசு ஞானம் கழிதற்கு ஏதுவாவது. இங்ஙனம், சிவரூபம், சிவதரிசனம் என்னும் உணர்வுகளால் ஆன்மரூபம், ஆன்ம தரிசனம் என்னும் பசு ஞானங்கள் பற்றறக் கழியும் போது பசுத்துவ வாதனை முற்றிலும் நீங்கி விடுகிறது. அந்நிலையில் ஆன்மா, திருவருள் உண்மையை முன்னெல்லாம் காணாது தானே என நின்றாற் போல, இப்போது தான் அதுவேயாகித் தற்போதம் சிறிதும் இன்றித் திருவருள் வயப்பட்டு ஒன்றி நின்று, அவ்வருளாலன்றி ஒன்றும் அறிதலும் செய்தலும் இன்றி நிற்கும். யான் முதல் அல்லேன் ; என்செயலும் இல்லை ; எல்லாம் முதல் செயலே என உணர்ந்து நிற்கும் உணர்வு ஆன்ம இயல்பைத் தெளிய உணர்தலாகிய ஆன்ம சுத்தி எனப்படும். இவ்வுணர்வு நிலையில் ஆன்ம உணர்வு திருவருளோடு பிரிப்பின்றி ஒன்றி இதன் வயப்பட்டு நிற்றலின், அங்ஙனம் தன்னைத் தன்வயப்படுத்தி தானேயாய் நிற்றல் முதல்வன் இயல்பு என்பது உணரப்படும். இவ்வுணர்வே சிவயோகம் எனப்படும். இது நின்மல துரிய அருணிலை எனவும் கூறப்படும். "எவ்வெவர் தன்மையும் தன்வயிற்படுத்துத், தானேயாகிய தயாபரன் எம்மிறை", "ஒருவனே உருத்திரன், இரண்டாவதாக நிற்பான் அல்லன் ; அவன் தம் ஆளும் சக்தியால் எல்லாவற்றையும் ஆண்டு, காணப்படாமல் உள்ளே நிலையுறுகின்றான்" என்றாற் போல எழுந்த சுருதிகள் இவ்வநுபவ வெளிப்பாடே ஆகும். இந்நிலைக்கு மேல் திருவருளுக்கு முதலாகிய சிவத்தை மெய்யன்பால் தலைப்பட்டு அன்பே இன்பாய் அமரும் நிலை சிவபோகம் எனப்படும். இதுவே பிறவியின் முடிநிலைப் பெரும்பயன் ஆதலால், இது ஆன்ம லாபம் எனவும்படும். இந்நிலை இப்பிறவியில் இப்பொழுதே பெறக்கூடியது ( Here and now). அது நின்மல துரியாதீத ஆனந்த நிலை எனவும் கூறப்படும். இங்கு கூறிய தத்துவ ரூபம், தத்துவ தரிசனம் ,தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம் , சிவ தரிசனம் , சிவயோகம் , சிவபோகம் என்னும் பத்துமே தசகாரியம் எனப்படும். சூரியன் ஈர்ப்புச் சூழலில் பூமியும் , பூமியின் ஈர்ப்புச் சூழலில் சந்திரனும் அடங்கி நின்று , ஒவ்வொன்றும் தானும் தன் ஈர்ப்புச்சூழலும் (Gravitational Field) என இருவகைப்பட்டு இயைந்து நின்று வியாபக வியாப்பியமாய் நிற்றல் போல , முதற் பொருள் சிவம் , சக்தி என இருவகைப்பட்டு, இயைந்து நின்று உயிரையும் பாசத்தையும் தன்கண் அடங்கக் கண்டு தொழிற்படுத்தும் ; சிவ சக்தியில் அடங்கி நின்று தொழிற்படும் உயிர் ஆணவ மலம் காரணமாக அச்சக்தியின் உண்மையை அறியாது, தத்துவங்களாகிய பாசத்தைப் பற்றித் தொழிற்பட்டும் தொழிற்படுத்தியும் வரும். முதல்வன் வியாபகத்தில் உயிர் அடங்கி நிற்றல் போல , உயிரின் வியாபகத்தில் தத்துவங்கள் அடங்குவன ; உயிர் தனக்கு முதலாகத் தன்னை அடக்கிக் கொண்டுள்ள முதற் பொருளை நோக்காது தத்துவங்களைப் பற்றிச் சிறுமைப்பட்டு உலக போகங்களை நோக்கி நிற்கும் நிலையே பிறப்பு நிலை. இது பாற்கடலில் உள்ள மீன் தனக்குப் பரம ஆதாரமாக உள்ள பாலை பருகி வாழ எண்ணாது அதன் கண் வீழ்ந்து கிடக்கும் வேறு சில பொருட்களை நோக்கி அருந்த எண்ணி முயலுதல் போலும்.

மேலே விளக்கிய தசகாரியம் புறப்பொருளை நோக்கி நின்ற உயிரை, முன்னர்த் தன்னை உணர வைத்து பின் அங்ஙனம் உணரும் நிலையிலேயே உடன் உள்ள திருவருளையும், அத்திருவருளுக்கு முதலாக உள்ள சிவத்தையும் உணரவைக்கும் படி வழிமுறையாகும்.

முப்பொருளும் வேறு வேறு பிரிந்து நில்லாமல் ஒன்றோடொன்று கலந்து பிரிப்பின்றி உடன் நிற்பவை ஆதலால் , மேலே கூறிய பத்து ஞானச் செய்திகளும் ஒன்றன்பின் ஒன்றாய் நிகழாமல் அவற்றுள் சில உடன் நிகழ்வனவாம். இது மேற்கூறிய விளக்கத்தாலும் உணரப்படும் குறிப்பாக சிவரூபம் ஆன்ம தரிசனத்தைப் பயத்தலால் அஃது அதில் அடங்கும். அங்ஙனமே சிவதரிசனம், சிவயோகம் என்பவை ஆன்ம சுத்தியில் அடங்கும் .சிவயோகம் ஆன்ம லாபம் எனப்படும். இவ்வாறாதலின் , ஆணவத்தின் நீங்கிய நின்மல சுத்தாவத்தையை ஐந்தவைத்தையென வைத்து உணரும் பொழுது தசகாரியங்களைத்(1) தத்துவரூபம் , (2) தத்துவ தரிசனம் , (3) தத்துவ சுத்தி , (4) ஆன்ம ரூபம் , (5) ஆன்ம தரிசனம் , (6) ஆன்ம சுத்தி , (7) ஆன்ம லாபம் என ஏழு அவதரங்களாக உணர்த்தி , இவற்றுள் ஆன்மரூபம் வரையுள்ள நான்கும் நின்மல சாக்கிரம், ஆன்மதரிசனம் , நின்மல சொப்பனம், ஆன்மசுத்தி, நின்மல துரியம், ஆன்பலாபம் ,நின்மல துரியாதீதம் என அடக்கிக் கூறுவது துறைசையாதீன ஞான அநுபவ மரபாக உள்ளது. நின்மல சுழுத்தி என ஓர் அவத்தை இங்குக் கூறப்படுவதில்லை. அஃது ஆன்மா தனக்கு எல்லாச்செயலும் உள்ளன என உணரும் அளவில் தோன்றிப் பின் மறைவது.

இந்நிலைகள் கரும்பை நுனியினின்றும் நுகர்வோனுக்கு இன்பம் பெருகுதல் போல, மேன்மேலும் இன்பத்தைப் பெருக்கி முடிவில் வரம்பிலா இன்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்ப்பன. ஆதலால் மேலே கூறிய சுத்தாவத்தையைப் பத்து முழம் உள்ள கரும்பாகவும், அது ஏழு கூறு உடையதாகவும் உருவகித்து அவற்றில் முதல் நான்கும் ஒரு கணு, பின் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கணு எனக் கூறியுள்ளனர் பெரியோர்.

பின்வரும் பஞ்சாக்கரப் பஃறொடை அடிகள் கருத்தில் வைக்கத்தக்கவை. இது திருவாவடுதுறை ஞான ஆசிரியர்களுள் ஒருவராகிய பேரூர் வேலப்பதேசிகர் அருளிச் செய்தது:

"பிரியாத ஐந்தவத்தைப் பேற்றிற் - சரியாய்த்
தெசகா ரியம் ஏழாய்ச் சேரும்: உவமை
வசமாம் கரும்பின் வகைகேள் - நிசமான
சுத்தவத்தை யாங்கரும்பின் தொல்கணு ஐந்தாகும் முறை
முத்திவருசாக் கிரமுதலாம் - பத்து
முழம்காரியம் அவற்றின் மூன்றடக்கிப் பங்கேழ்
தத்துவ ரூபமுடன் தற்காட்சி சுத்தி உயிர்
ஒத்த உருவம் உயர் காட்சி - சுத்தி
இலாபம் இவை எழில் இலங்கும் உயிர்க்காட்சி
நிலாவு சிவரூபம் நேராம் - குலாவு சுத்தி
தன்னிற் றரிசனமும் சார் யோகம் ஆம் இரண்டும்
மன்னும்: இவை ஏழும் வரும் முறையில் - துன்னுகின்ற
சாக்கிரகத்தில் நான்கு ; தகுஞ்சொப்பனம் ஒன்று ;
நீக்குஞ்சுழுத்தி ;நிறை துரியத்து ;ஆக்கியிடும்
ஒன்றாம் ; அதீதத்தே உற்றிடும் ஒன் (று) ஆகும்."

### 14ஆம் பக்கத் தொடர்ச்சி.....

செல்லப்பர் அவரை ஆசீர்வதித்தார். அடுத்து தித்திக்கும் ஒரு மொழியால் சின்மயத்தைக் காண வைத்தார். அச்சின்மயமான நிலையிலே செல்லப்பர் எத்திக்குமாகி நிற்பதைத் தெள்ளத் தெளிவாகச் சிவயோகர் கண்டார். கண்ட அவரைச் செல்லப்பர் "எல்லாம் நீ" என்று எங்கும் செறியச் செய்தார். மேலும் செல்லப்பர் ஆறாறு தத்துவங்களுக்கும் அப்பால் நாதாந்த வெளியிலுள்ள தன்னைக் காட்டி யோகரையும் அந்த வெளிக்கு ஈர்த்துச் செல்கிறார். அந்த வெளியின் ஆதியும் அந்தமுமில்லாத அகண்ட தன்மையைக் காட்டி அதுவே நீ எனவும் அது சோதிமயமானதெனவும் காட்டியருள்கின்றார். காட்டி அந்த வஸ்துவில் இலயித்துச் "சுட்டிறந்து நில்" என உபதேசிக்கின்றார். தன்மை முன்னிலை படர்க்கையற்றுத் தன்னையறிந்து சற்குருவாக நிற்கும் தன் உண்மையை யோக சுவாமிகள் அநுபூதியாய் உணர்ந்தனர்.

**சுட்டிறந்து நிற்க வழிப்படுத்தும் யோககுருநாதன்**

யோக சுவாமிகள் எங்கள் குருநாதன் திருப்பதிகத்திலும் 'நற்சிந்தனை' யில் இன்னும் பல இடங்களிலும் இவ்வாறு கூறியிருப்பது நம்பொருட்டேயாம். நாம் நீ நான் என்று பாடுபடாமல் சுட்டிறந்து நிற்கும் தவம் இயற்றுதற் பொருட்டே கூறியருளினார்.

நாம் பேரும் ஊரும், உற்றாரும், உறவினரும், சாதியும், சமயமும், பட்டமும், பதவியும் என்று வாழும்போது பாச பந்தத்துக்குட்பட்ட புல்லராக இழிந்து போகிறோம். மாயவுடலையும் மாய வாழ்வையும் மெய்யென மதித்து மாண்டு மடிந்து போகிறோம். சுட்டிறந்து நிற்கும்போது விண்ணைப்போல வியாபகமாகிறோம். உலகெலாம் உறவாகக் கொள்கிறோம். தன்னுயிர்போல மன்னுயிரை நேசிக்கிறோம். எம்மிடம் பேரன்பு பெருகுகிறது. பெரிய பொருளோடு சம்பந்தமுற்று நித்திய வாழ்வைப் பெறுகிறோம். இதனை உணர்ந்த மெய்யடியார்கள் 'சும்மா இருக்கத் துணிந்து கொண்டோமே சுட்டிறந்த சிவசோதிக்கும் நாமே' என்று உபசாந்தராய் வாழ்கின்றனர்.

**எழிலார் சிவதொண்டன்**

ஓம்சிவம் என்று ஓயா தோதி
பாம்பணி பரமன் பதமலர் சூடிட
நாம்என்று முள்ளோம் நமக்கொரு குறைவில்லை
நாமொன்றும் அறியோம் எப்பவோ முடிந்தது
உண்மை முழுவதும் உனக்கொரு செயலிலை
உண்மை யிவற்றை ஓயா துணர்த்தும்
நற்சிந் தனையாம் நான்மறை அமுதை
கற்றோர் மற்றோர் களித்திட வளித்து
வெம்மைசேர் நரகினில் வீழ்ந்தழுந் தாமல்
அம்மையாய் அப்பனாய் ஆருயிர்க் குருவுமாய்
எம்மையாள் எழிலார் சிவதொண்ட நீயும்
நாளும் நிலவி நன்கு வாழியவே.

-சிவசிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிவதொண்டன்

சுபகிருது வருடம் மார்கழி- தை

மலர் : 87 (2023 ஜனவரி - பெப்ரவரி) இதழ் : 1-2


## குருவடிவாவது திருவடியே

இத்தலையங்கத்துட் புகுவதற்கு மணிவாசக சுவாமிகளது ஒரு திருவாசகம் தக்கதோர் நுழைவாயிலாகும். அது மேல்வருவது :

"செங்கண்நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணனாய் வந்து அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்"

இப்பாடலிலுள்ள செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய பொங்குமலர்ப்பாதம் என்பது காண்டற்கரிய திருவடியைச் சிறப்பிக்கின்றது. "பூதலத்தே தென்னன் பெருந்துறையான் அங்கணனாய் வந்து" என்பது மண்ணகத்தேயுள்ள திருப்பெருந்துறையில் பரமாசாரியராய் வந்தருளியதைக் குறித்து நிற்கின்றது. இப்பாடலிற் குருபரன் மணிவாசக சுவாமிகளது பிறப்பறுத்து வீடுபேறருளிய பெருஞ் சீர்மையும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே பிறப்பறுத்து வீடருளும் பொருட்டுத் திருவடியானது குருவடிவாய் வரும் திறம் இத்திருவாசகத்தில் உருக்கமாகப் பாடப் பெற்றிருக்கிறது.

மணிவாசக சுவாமிகள் திருப்பெருந்துறைக் குருந்த மர நிழலில் குருவாகி வந்த திருவடியால் ஆட்கொள்ளப் பெற்றது போலவே யோக சுவாமிகள் நல்லைத் தேரடியில் குருவாக வீற்றிருந்த திருவடியால் ஆளாக்கப் பெற்றவர். திருவடி குருவடிவாக வருவதனையும் குருவடிவம் சரணகமல மலர் தலைதனிலே வைப்பதனையும் இருவரும் இனிதாகப் பாடியிருக்கின்றனர். திருவடி நிலந்தன்மேல் நீள்கழல்களாய் வந்து கண்ணாரமுதமான குருவடிவாய் நின்று "செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள்பால் எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாகச்" செய்த திறத்தை மணிவாசக சுவாமிகள் பாவைப் பாட்டில் பாடியிருக்கிறார்.

"அரியனும் தேடி அறியாத் திருப்பாதம்
பெரிய புவனத்திடையே பேயேனை ஆண்ட
உரிமை நினைந்துருகி உள்ளத்துவகை பொங்க
இருவிழியும் நீரிறைப்ப இரவுபகலேத்தி
அரிய திருப்புகழையே அறையுதும் காண்.."

என யோக சுவாமிகள் அம்மானைப் பாட்டில் பாடியிருக்கிறார். இவ்வாறே எங்கள் சுவாமிகள் நற்சிந்தனையிலுள்ள பாடல்கள் பலவற்றில் உருகி உருகிப் பாடியுள்ளார். அவற்றுள் 'திருவடி வாழ்க' எனும் தலைப்பிலுள்ள செய்யுட்களை எடுத்தாண்டு விளக்குதற்கு இக்கட்டுரை முயல்கிறது.

### 1.எழிற்குரு திருத்தாள் வாழ்க

திருவடி வாழ்க என்னும் பாடலின் முதற் செய்யுள் எழிற்குருவின் திருத்தாளை வாழ்த்துகிறது. இச்செய்யுள் மேல்வருவது :

"அகரமாம் எழுத்துப் போல அனைத்திலும் கலந்து நின்றே
இகபரம் இரண்டும் ஈந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க"

இச் செய்யுளில் அகர உயிரெழுத்து எல்லா எழுத்துக்களிலும் கலந்து நிற்பது போல குரு எல்லாவற்றிலும் கலந்து நின்று அறிவூட்டி வளர்க்கிறார் எனக் கூறப்பட்டிருக்கிறது. குருபரன் "பார் முதற் பூதங்களாகிப் பரிதிமதி இவையாகிக் காரொடு கடல் மலையாகி கண்ணுக்குக் கண்ணும் தானாகி" என்றபடி எல்லாவற்றிலும் நின்று அறிவுறுத்துகின்றார். "மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறே வந்து அறிவாந் தேற்றனே" என்றும் உள்ளதன்றோ! உலகத்திலே வெவ்வேறாயுள்ள அனைத்திலும் தோன்றாப் பெருமையனாக நின்று அடியவருக்குத் தெளிந்த அறிவூட்டி வளர்க்கிறார். இவ்வாறு அறிவூட்டும் திறத்தைச் சாத்திர நூல்கள் அதிசயிக்கும் வண்ணம் அறிவுறுத்தியுள்ளன. அத்தகைய நூலொன்றில் தாத்தாத்திரேயர் என்பவருக்கு இருபத்தினான்கு குரவர்கள் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அவ்விருபத்து நால்வரும் அனைத்திலும் கலந்து நிற்கும் குருபரனுக்கு எடுத்துக்காட்டாயுள்ளவரே. அக்குரவருள் பாம்பும் ஒன்று. பாம்பிடமிருந்து காற்றை மட்டும் உணவாகக் கொண்டு ஒரே நிலையில் நீள நினைத்திருக்கும் அறிவினை அவர் பெற்றுக்கொண்டதாகக் கூறுவர். எங்கள் சுவாமிகள் ஓரன்பருக்கு பைத்தியக்காரி ஒருத்தியைச் சுட்டிக்காட்டி "இவர் என் குரு" எனக் கூறியதோர் சம்பவம் அவர் சரிதத்தில் இடம்பெற்றிருக்கிறது. இத்தகைய குருவை "எழிற்குரு" எனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் கூறுகிறது. கோலம் பாம்போ பைத்தியக்காரியோ ஆகலாம். ஆயின் அக்கோலங்களில் மறைந்து நின்று அறிவூட்டுபவன் சுந்தரன் அன்றோ! ஆதலால் அக்குரு எழிற்குரு எனப்பட்டார். இத்தகைய குருவை நற்சிந்தனையிலுள்ள சின்னத்தங்கப் பாட்டிலுள்ள தெம்மாங்குப் பாடலொன்று அழகாகச் சொல்கிறது.

"அருவாய் உருவாகி அம்பலத்தே கூத்தாடும்
குருபரனை நீ வணங்கிச் - சின்னத்தங்கம்
கும்பிட்டுக் கொண்டாடிடுவாய்"

இக்குருமணி அனைத்திலும் கலந்து நிற்பவரே. மேலும் இக்குருபரன் ஆன்மாவுடன் என்றும் உள்ள குருபரனே. அவர் இம்மையிலும் மறுமையிலும் எம்மை விட்டு நீங்காதவர். எப்பிறப்பும் எம்மோடு உடனாயிருப்பவர். இருந்து இகபரசுகங்களை வழங்கி எம்மை வளர்ப்பவர். இது இச்செய்யுளிலே "இகபரம் இரண்டும் ஈந்த" எனக் கூறப்பட்டிருந்தது. இதனைக் குருவாகத் தோன்றிய செல்லப்பர் அறிவிக்க எங்கள் சுவாமிகள் அறிந்தனர். "என்று நீ அன்று யாம்" என்பது குருவாக்கு.

இவ்வாறு எங்கும் என்றும் எழிற்குருவாய் நின்று திருத்தாள்கள் அன்பரை வளர்த்து ஆளாக்குகின்றன.

**2.காணவே வந்த கழலடி**

அனைத்திலும் கலந்து நிற்கும் எழிற்குருவைக் காண்டலரிது. ஆயின் அன்னை தந்தை ஆகியோராய் நின்று அறிவூட்டி வளர்க்கும் குருபதத்தைக் காணக் கண் படைத்தவர் கண்டு கொள்வர். இது திருவடி வாழ்க பாடலின் இரண்டாம் செய்யுளில் உளது.

"ஆணுமாய்ப் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகிக்
காணவே என்முன் வந்த கழலடி என்றும் வாழ்க"

ஆணும் பெண்ணுமானவை தம்முள் செலுத்தும் அன்பினூடாக திருவடி ஊட்டும் நல்லறிவை அறிந்து கொள்கின்றனர். காதல் மடப்பிடியோடு களிறு வருவதைக் கண்ட அப்பரடிகள் "கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்று பாடுகின்றார் அல்லவா! மார்க்கண்டேயருக்கு அவர் தந்தையான குச்சக முனிவரே குருவாய் அமைந்தனர். திருநாவுக்கரசருக்குத் திலகவதியார் குருவாக அமைந்தார். அன்னை தந்தையர் கண்ணினைக் கண்டு களிக்குமாறு கொண்ட கடவுட் கோலங்கள் என்று சுவாமிகள் கூறியுள்ளார். பெற்றோரின் பிள்ளைகளான நாங்களெல்லாம் நம் பெற்றோரிடத்தில் அதிசயமான அன்பை அனுபவித்திருக்கிறோமல்லவா? அந்த அதிசய அன்பு 'அன்பே சிவம்' என்ற சிவ அன்பின் அறிகுறியே. இந்த அன்பின் அதிசயத்தை அறிவிக்கும் குரவராக உள்ளவர் இருமுது குரவராவர். இவ்வாறு ஆணுமாய்ப் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகிக் கண்ணினை கண்டு களிக்குமாறு அறிவூட்டும் குருவை "காணவே என் முன் வந்த கழலடியென்றும் வாழ்க" எனச் சுவாமிகள் வாழ்த்துகின்றனர்.

**3.என்போல் வந்து குணங் காட்டி ஆண்டுகொண்ட குருவின் சீர்பாதம்.**

அனைத்திலும் கலந்து நிற்கும் குரு தோன்றாப் பெருமையனான குரு. அன்னை தந்தையராயிருக்கும் குரு, காணுமாறுள்ளவராயினும் அவர்கள் மண்மேல் மானுடப் போர்வை சாத்தி வந்த ஞான குரவரல்லர். அவ்வாறு, தோன்றிய ஞான குருபாதத்தை வாழ்த்தும் செய்யுட்கள் மேல்வருவன :

"ஈன்றிடு தந்தை தாயோ டெய்திய சுற்றமாகித்
தோன்றிய குருவுமான துணைவநின் திருத்தாள் வாழ்க

உணர்ந்தார்க்கும் உணரவொண்ணா ஒருவனே என்போல் வந்து
குணங்காட்டி ஆண்டுகொண்ட குருவின் சீர்ப்பாதம் வாழ்க"

இச்செய்யுட்களிலே 'தோன்றிய குரு', 'என்போல் வந்து' என வரும் மொழிகள் யோகசுவாமிகளைப் போன்ற வடிவத்தில் வந்து ஞானகுருவாய்த் தோன்றி நின்ற செல்லப்பா சுவாமிகளை உணர்த்துவன. "ஈன்றிடு தந்தை தாயோடெய்திய சுற்றமாகி" என்ற அடி தோன்றிய குருவுடன் தோன்றாக் குருவைத் தொடுப்பதாக அமைந்திருக்கிறது. திருவடியே தோன்றாக் குருவாய் நின்று அன்பரைப் பக்குவப்படுத்திய பின் தோன்றிய குருவாய் நின்று வளர்க்கும் திறம் இவ்வாறு தொடுக்கப்பட்டிருக்கிறது. குருவாகத் தோன்றிய செல்லப்பர் யோகருடன் தோழனாக நின்று அறிவூட்டிய தருணமுண்டு. அத்தருணத்தில் யோகரை 'காணும்' என்று செல்லப்பர் அழைத்திருக்கிறார். காணும் என்ற மொழி தோழரை அழைத்தற்கு வழங்கும் வழக்கு மொழியாகும்.

அன்பரின் ஐயத்தை அகற்றுமுகமாக இவ்வாறு செல்லப்பர் துணைவனாக நின்றனர். இவ்வாறு நின்ற தன்மையை "ஐயமேன் காணும் என்று அடியனேன் தன்னை நோக்கி உய்ய நல் அருளைத் தந்த உத்தமன் பாதம் வாழ்க" என்று சுவாமிகள் பாடியருளினார். செல்லப்பர் மானிடன் போல் தோன்றியதும் துணைவன் போல் கூடித்திரிந்ததும் யோகரைத் தன் அருட் கண்ணியில் அகப்படுத்தும் பொருட்டே. அகப்படுத்தியதும் "உணர்ந்தார்க்கும் ஒருவனாயிருக்கும் திருவடியாயிருக்கும் குணங்களைக் காட்டலானார். அக்குணங்களைக் கண்டபோது சுவாமிகள் எங்கள் குருநாதன் எழில் நல்லை வாசனாயினும் இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன் என்றவாறும் மூவருக்கும் அறிய ஒண்ணான் எங்கள் குருநாதன் என்றவாறும் பாடலானார். இவ்வாறு கண்டதும் குருவினது பாதம் சீர்பாதமாகத் தெரிந்தது. ஆதலால் குருவின் சீர்ப்பாதம் வாழ்க என வாழ்த்தலானார். சீர்பாதத்தைச் ஸ்ரீபாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை

## சற்குரு தாள்கள் வாழ்க

அத்துவா மார்க்கமாறும் அகற்றியே யடியனேனைத்
தத்துவா தீதனாக்குஞ் சற்குரு தாள்கள்வாழ்க

ஆக்கைநீ யல்லைநீயோ ஆன்மாவென் றெனக்குச்சொல்லித்
தீக்கைவைத் தாண்டுகொண்ட தேசிகன் திருத்தாள்வாழ்க

இருந்துபா ரென்றெனக்கோர் இனியநல் வாக்குத்தந்த
அருந்தவன் என்னும்வல்ல ஆசான்றன் தாள்கள்வாழ்க

ஈயாத புல்லர் தங்கள் இல்லத்திற் கேகாவண்ணம்
தாயாரைப் போல்வந்தாண்ட சற்குரு தாள்கள் வாழ்க

உன்மத்தன் போலேவந்தென் னுடல்பொரு ளாவிமூன்றும்
தன்னத்தம் வாங்கிக் கொண்ட சற்குரு தாள்கள் வாழ்க

ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செயுந் திருத்தாள் வாழ்க

எண்ணிய வண்ணம்வாழ எனக்குநல் லருளைத்தந்த
கண்ணிய முடையசெல்வன் கழலடி யென்றும்வாழ்க

ஏடவிழ் கோதைமாதர் எழில்கண்டு மயங்காவண்ணம்
தாடலை தன்னில் வைத்த சற்குரு தாள்கள் வாழ்க

ஐயமேன் காணுமென்றே அடியனேன் தன்னைநோக்கி
உய்யநல் லருளைத்தந்த உத்தமன் பாதம் வாழ்க

ஒருமொழி யதனாலென்னை ஓவியம் போலவாக்கி
வருபயம் நீக்கியாண்ட வள்ளல்தம் திருத்தாள்வாழ்க

ஓ மெனும் எழுத்தினுள்ளே உலகெலாம் விளங்கக்காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்றவன் திருத்தாள்வாழ்க

ஒளவன நல்லைதன்னில் அழகிய ஆடல்காட்டிச்
செவ்விதி னாண்டுகொண்ட செல்வன்றன் தாள்கள் வாழ்க

அஃகமுங் காசுந்தேடி அலைந்துநான் திரியாவண்ணம்
நஃகுதல் செய்தநல்ல நாதன்றாள் வாழ்க! வாழ்க!

- நற்சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் கூறுவர். அது சகல சம்பத்தும் தரவல்லதாதலால் ஸ்ரீபாதம் எனப்பட்டது. அது உணர்ந்த மாதவராலும் உணரொணாதது. அத்தகைய 'மாணடி'யே குருவாக வந்தருளியது என்பதை குருவின் சீர்ப்பாதம் வாழ்க எனச் சுவாமிகள் வாழ்த்தியருளினார்.

**4. மனத்தில் வாழும் மலர்பதம்.**

திருவடி, முதலில் அனைத்திலும் கலந்து நிற்கும் எழிற்குருவாய் அம்பலத்தே கூத்தாடியது. பின்னர் ஆணுமாய்ப் பெண்ணுமாகிக் காணுமாறு கழலடியாய் நின்றது. அடுத்து செல்லப்பன் என்ற நாமம் பூண்ட குருவாய் ஓடியுலாவித் திரிந்து சீர்பாதமாய் இருக்கும் குணங்காட்டியது. திருவடி ஈதெல்லாம் காட்டி அன்பனின் அகத்தைத் தான் வீற்றிருக்கத் தக்க கோயிலாக்கிய பின் அவ்வகத்தைத் தன் வாழிடமாகக் கொள்ளலாயிற்று. தம் மனத்தே பூத்திருக்கும் மலர்ப்பதத்தை வாழ்த்துவதாக ;

"ஊசிமேல் நுனியில் நின்றே உக்கிர தவத்தை யாற்றும்
மாசில் மாதவருங் காணா மலர்ப்பதம் மனத்தில் வாழ்க"

எனச் சுவாமிகள் வாழ்த்துகிறார். மலர்ப்பதம் என்பது அனைத்தும் மலர்வதற்கு இடமான திருவடி. அது அனைத்துக்கும் முதலானது. அனைத்தையும் படைத்துக் காத்து அழிக்கும் மூவரும் முளைத்தற்கு இடமானது. அது மாலயனும் தேடி அறியாத மலரடி. அத்தகு முண்டக மலர்ப் பாதம் தன் மனத்தில் வாழ்வதைக் கண்டு வாழ்த்தி மகிழும் சுவாமிகள் எத்துணை மகத்தானவர். அவர் மாசில் மாதவருங் காணா மகத்தானவரே.

**5. தன்னைத் தந்தாண்டுகொண்ட சற்குரு தாள்கள்**

மனத்தில் வாழும் மலர்ப்பதம் அம்மட்டோடு நிற்குமோ? மனத்திற்கப்பால் சித்தம், சித்தத்திற்கப்பால் சீவன், சீவனுக்கப்பால் சீவனுக்குச் சீவனான சிவன் எங்கும் பரவுகிறது. ஊனாய் உணர்வாய் உயிருக்குயிராய் யோகசுவாமிகள் முழுவதுமாக நிறைகிறது. அந்நிலையில் தானாய் விளங்கும் சற்குரு,

"என்னை நீ வேறாய் எண்ணி இடர்பட வேண்டாமென்று
தன்னைத் தந்தாண்டு"

கொள்கிறார். அந்நிலையில் சுவாமிகள் தன்னைத் தந்தாண்டு கொண்ட சற்குரு தாள்கள் வாழ்க என வாழ்த்துகிறார். சற்குரு சுவாமிகளைத் தானாகச் செய்து விட்டார். இப்பொழுது சுவாமிகள் தன்னைத் தன்னால் அறிந்து தானேதானாயிருப்பவராகிறார். அந்த இருப்பு திருவடி இருப்பு. சுவாமிகள் திருவடியாகவே இருக்கிறார். திருவடி குருவடிவாக வந்து தன்னையே தந்து சுவாமிகளைத் தானாய் விளங்கும் தலையாய அருளைச் சொரிந்து விட்டது. சொரிந்து திருவடித் தொண்டு செய்யுமாறு அருளியது. இந்த ஆணைப்படியே சுவாமிகள் சிவதொண்டாற்றினர். இதற்கும் அப்பால் சிவதொண்டு செய்தும் செய்யாமல் சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டிவைத்ததே தேசிகத் திருவடியின் தலையாய பேரருளாகும்.

**தீதிலாத் தேசிகன் திருவடி**

"ஏதுமொன்றற நில் என்றே எனக்கு நல்லருளைத்தந்த
தீதிலாத் தேசிகன் தன் திருவடி வாழ்க"

இங்கு சொல்லப்பெற்ற நல்லருள் உயர்வற உயர்ந்த நலத்தை அருளிய தலையாய அருளாகும். இந்த நல்லருளில் சுவாமிகள் ஏதுமொன்றற நிற்கிறார். அவருக்குப் பிறப்பில்லை; இறப்பில்லை; அவர் மண்ணில் வாழ்வதுமில்லை; சிவதொண்டு புரிவதுமில்லை; ஒன்றிலும் முட்டாமற் தட்டாமல் இருந்தார். அவர் சிவதொண்டன் நிலையத்துள் வராமலேயே சிவதொண்டு செய்து திரிந்ததன் இரகசியம் இதுவே போலும். அவர் நாமறியோம் ;நமக்கொரு தேவையுமில்லை; நமக்கொரு வேலையுமில்லை; நாம் நன்மோன நிறைவினர். இந்நிலையிலே செல்லப்ப தேசிகர் திருவடி, சிவயோகத் திருவடியை நிற்க வைத்தது.

**முடிவுரை**

இத்திருவடி வாழ்த்துப்பாடல் திருவடியாயிருக்கும் சுவாமிகளாற் பாடப்பட்ட பாடல். 'பாதுகாபஞ்சகம்' என்ற தோத்திரம் சிவபெருமானாலே அருளப்பட்டதென்பர். அப்பாடல் போன்றதே இப்பாடலும் திருவடி வழிபாட்டுக்காரருக்கு இது ஒரு திருமந்திரமாக அமைவது. சிவதொண்டன் நிலையங்களிலே திருவடிக்கு அபிடேகம் நிகழும் வேளையிலே திருவடி அபிடேக ஆராதனைகளைப் பெற்றுத் தேசிகத் திருவடியாய் ஒளிரும் வேளையில் மனதினில் நினைந்து வாயாரப் பாடுதற்குகந்த அருச்சனைப் பாடலாகும்.

**சோதியைக் காட்டிய சுந்தரயோகன்**

சோதியைக் காட்டிய சுந்தர யோகனே
வாதிப்பார் காணரிய வள்ளலே - மேதியினில்
சற்குரு நாதனாய்ச் சார்ந்தோரை ஆட்கொண்டாய்
பற்பல பாங்கிற் பரிந்து.

காண்பரிய பேரொளியே காவலனாய்க் காசினில்
பூண்டஒரு பொன்னார் திருவுருவே - நீண்ட
அருள்செய்து அன்பர்களை ஆட்கொண்டு யோக
குருவாய் அமைந்தாய் குழைத்து.

**-சிவசிந்தனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The

# Sivathondan

To the Heart that yearns, the Lord draws nigh

(January - February 2023 )

Volume: 87

Issue : 1- 2

## NATCHINTHANAI

### THE HERO

He is a hero who sees God and rids himself of trouble, And
who humbly worships having banished sin.

He is a hero who does tapas and says farewell to sorrow,
And of like and dislike brings about the end.

He is a hero who at all times patience can maintain, And in
face of poverty remains a happy man.

He is a hero who is great, all meanness having shed, And
who on gaining heavenly bliss will ever fix his aim.

He is a hero who can keep his senses in control. And
who cruel enmity has utterly forsworn.

He is a hero who protects his Dharma as his eye, And
woman,wealth and property has driven from his mind.

He is a hero who like ether everything pervades, And in
whom, it can be said, all thought has ceased to be.

He is a hero who ignores all differences of caste,
And treads the path of righteousness, as by the scriptures shown.

He is a hero who through study understands the truth, And
finally unites himself with the Lord's Primordial Feet.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Yogaswami the Great Yogi

It was in 1922 that the Swami told me for the first time how he attained God consciousness. His *sadhana* was indeed very strenuous. In a week the first three days and nights would be spent in *Nirvikalpa samadhi* the fourth day was the only free day in the week when he would have some food and talk to friends. The next three days and nights again he would be immersed in *Nirvikalpa samadhi,* Sri Ramakrishna's opinion was that an ordinary person cannot be in *Nirvikalpa samadhi* for more than twenty four hours, since the spiritual force generated is much too great to be borne by an ordinary brain but here we have our guru spending during his early days the entire month in *Nirvikalpa samadhi* with only a relaxation of four days. This was his routine till he attained God consciousness.

*Nirvikalpa samadhi* connotes union of the *atma* with the *Paramatma* but the *sadhaka* is oblivious of the world; he is dead to everything around him in *samadhi*. Even the entire bliss may not be brought down when he comes down to waking consciousness; but in God consciousness of which I write he is in *jagrat* or waking consciousness with the full consciousness of the *Nirvikalpa samadhi*. Technically it is called in the *shastras* as *Savikalpa samadhi*. This state of consciousness is expressed more clearly in *Saiva Siddhanta*. The Swami was all the time in the *suddha avastha* viz. *Turiyatheetham* while in waking consciousness [*jagrat*]. In sleep it is even easier to be in *Turiyatheetham*.

The culmination of this strict and strenuous *sadhana* as mentioned before was God consciousness in the waking state. The bliss in that state is celestial. At the end of six months the heavenly joy temporarily disappeared and the mundane consciousness was indeed a step lower down. He gave up his regular *sadhana* and was since then letting this God consciousness to trickle down to his physical brain in a natural way. He told me in 1922 that he had already given up his early *sadhana*.

Let us come down to more mundane questions during this period. When a devotee would approach him near the gate, he would give the answer to his question and there would be no need for the devotee to open the gate of the compound. The whole world was an open book, he said. The capacity to see or know anything and everything was there. He also had super human powers. If he would just clap his hands a shower of rain would pour down. When he said this, I must confess that I chuckled within myself. Soon after that remark I had to go to a distance of a hundred yards to answer a call of nature. On my return I had to run since it had begun to rain. Within a few minutes the rain disappeared! If he wanted food he had just to tap the wall! [சும்மா தட்ட, வேணுமென்ற சாப்பாடு வரும்] . This is a common statement of his, the truth of which was experienced by his devotees.

God consciousness is beyond the time factor. In other words the past, the present and the future are an open book. It is also beyond the distance factor. In the referring to England Swami would say [அதென்ன ஒரு கவடு]. That would mean that he could be there at will.

During the period of God consciousness every fibre of his being was aglow with the celestial joy of the kingdom of God. I asked Swami if he could be clairvoyant when ever he wills. He replied in the negative but added that clairvoyance came naturally. For example in one case when a neighbour complains to him that his cow is lost, he just sees the cow at a particular place, to which he directs him, while in another case he just chases away the complainant saying that he is not an astrologer. In the latter case God has not shown him the whereabouts of this cow! But during the six months period of God consciousness he wouldn't have chased away anyone, since everything was an open book.

Since his early years he spent six days of the week in *Nirvikalpa Samadhi,* it is not surprising



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

that the people of Jaffna dubbed him with the appellation 'Yogar'. But extremely few knew how great a Yogi he was. He rarely revealed himself.

It was given to Swami Satchithananda Raja Yogi popularly known as Sankara Suppiar, to know the pinnacle Yogaswami had attained in Raja Yoga and *Kundalini* Yoga. The occasion was when Sankara Suppiar was returning from India after twelve years of training under *Sannyasin* gurus. When Sankara Suppiar went to India in search of a Guru, it is obvious that he didn't know the stature of Yoga Swami. While he was travelling by the day train from Talaimannar he saw at Pallai a most amazing phenomenon. Light was falling on his face as if a beam emanating from a lighthouse in the direction of Jaffna was directed on him. As the train was moving the beam of light was being focussed on him. He immediately realised that it was the light of *Kundalini Sakthi* emanating from the *ajna chakra* of a very great yogi. He was on the look out for the yogi and when the train was nearing the Jaffna station he saw the light coming from the forehead of Yoga swami who was standing by the side of the level crossing. When Sankara Suppiar reached the station he obtained permission from the large gathering that had come to receive him and went straight to Swami Yogar to prostrate at his feet and receive his blessings.

I had known Sankara Suppiar intimately since I had studied *Saiva Siddhantha* under him. In the early thirties Yogaswami had requested a group of young devotees to conduct a study circle on 'Serpent power' by Sir John Woodroffe [Arthur Avalon]. I was bursting to ask the Swami, who was usually present at the circle, his personal experience about the chakras, but before I could put the question, he smiled and said that he didn't know anything about them. "நாமறியோம்" was his famous dodge to prevent inquisitiveness.

A Punjabi professor of philosophy told me that when he visited his guru on his last sick bed, he cried asking his Guru what he should do whenever he was in a difficulty. The Guru told him to look at the open sky, call him by name and address his question and that he would reply. I can testify to the truth that a Guru will look after his disciples even more promptly from the other side than when he was on earth. Our humble tributes well forth to the memory of his holy feet.

*Om Tat Sat Om*

யாழ். மாநகர சபை
03 APR 2023
தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

| | | |
|---|---|---|
| 01. | நற்சிந்தனை 7ஆம் பதிப்பு | 450.00 |
| 02. | NATCINTHANAI (ENGLISH EDITION) | 400.00 |
| 03. | வள்ளியம்மை திருமணப் படலம் | 150.00 |
| 04. | நற்சிந்தனைக் கீர்த்தனைகள் – சாதாரண பதிப்பு | 12.00 |
| 05. | யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ஆம் பதிப்பு) | 350.00 |
| 06. | என் நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமிகள் | 100.00 |
| 07. | நமசிவாய மாலை | 35.00 |
| 08. | தியான காலச் சிந்தனை (புதிய 3ஆம் பதிப்பு) | 35.00 |
| 09. | யோக சுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 250.00 |
| 10. | சிவத் தியான மாலை (உரையுடன்) | 20.00 |
| 11. | தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும் | 200.00 |
| 12. | தாயுமான சுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்) | 80.00 |
| 13. | சைவத் திருமுறைத் திரட்டு (புதிய 5ஆம் பதிப்பு) | 300.00 |
| 14. | KANDHAPURAANAM | 400.00 |
| 15. | YOGASWAMI TREASURED MEMORIES | 300.00 |
| 16. | YOGASWAMI LIFE AND SPIRITUAL GUIDANCE | 500.00 |
| 17. | HOMEAGE TO YOGASWAMY | 10.00 |
| 18. | சண்முக கவசம் | 25.00 |
| 19. | முருகன் திருப்பாடற் திரட்டு | 50.00 |
| 20. | சிவஞான சிததியார் | 500.00 |
| 21. | சர்வஞானோத்திர ஆகம ஞானபாத வசனம் | 50.00 |
| 22. | திருவாசகம் | 250.00 |
| 23. | சிவதொண்டன் – செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு ஆண்டுச் சந்தா a) உள்நாடு | 1000.00 |
| | b) வெளிநாடு US $ | 30.00 |

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடங்கள்

திரு. க. சிவராசா,
5/2, விஷ்னு ரவர்
82, W.A சில்வா மாவத்தை,
கொழும்பு – 06
தொ.பேசி : 0112559360

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக் கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்.

Cheque, Drafts and Money Orders should be drawn in favour of Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.


Bilingual Monthly, Registered at the G.O.P. as News Paper.
No. DOP/News/102/2023

a) Printer : Arissona (Pvt) Ltd.
Advertising & Publications
91, Palaly road, Thirunelveli, Jaffna.
: T.P.: 021-2223222
b) Publisher S.Manivasakan
c) Published for Sivathondan Society Ltd.
434, K.K.S. Road, Jaffna, Srilanka.
: T.P.:021-2222799
d)Date of Publication: 01.03.2023
e)Editor S. Vinasithamby B.A. (Hons)
Sivathondan Nilaiyam,
Chenkalady.
T.P:065-2240272


If undelivered please return to:
The Manager, "Sivathondan Nilaiyam"
434,K.K.S. Road, Jaffna, Srilanka.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org